بسم الله الرحمن الرحيم     نحمده ونصلي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 1-2

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

6-13 ஜமாதியுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 2-9 ஃபதஹ் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி 2-9 ஜனவரி 2020

### அல்லாஹ்வின் கட்டளை

اِنْ يَّنْصُرْكُمُ اللّٰهُ فَلَا غَالِبَ لَكُمْ ۚ وَاِنْ يَّخْذُلْكُمْ فَمَنْ ذَا الَّذِىْ يَنْصُرُكُمْ مِّنْۢ بَعْدِهٖ ؕ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ ○

அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தால், உங்களை எவராலும் வெல்ல முடியாது. அவன் உங்களுக்கு உதவி செய்வதை விட்டு விட்டால், அவனைத் தவிர உங்களுக்கு உதவி செய்பவன் எவன்? நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடமே நம்பிக்கை வைத்தல் வேண்டும். (3:161)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இறை நெருக்கத்தைப் பெற்றிருப்பவருடன் சண்டையிடுவதும், போட்டி போடுவதும் இறையச்சமுடையவர்களின் பணியல்ல

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### நம்பிக்கையாளர்களின் அகப்பார்வைக்கு அஞ்சுங்கள்

اِتَّقُوْا فِرَاسَةَ الْمُؤْمِنِ அதாவது நம்பிக்கையாளர்களின் அகப்பார்வைக்கு அஞ்சுங்கள் என்று வந்துள்ளது. உதாரணமாக, ஒரு கடிகாரம் இருக்கின்றது. அதன் முட்கள் சுற்றிக் கொண்டே இருக்கின்றன. நீங்கள் மூன்று மணி என்பதற்கு பகரமாக ஏழு மணி என்று கூறலாம். ஆனால் அந்த கடிகாரமோ குறித்த நேரத்தை காட்டுவதற்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே அது சரியான நேரத்தையே எடுத்துக் கூறும். மேலும் அது தவறிழைக்காது. ஆக, அதனுடன் (கடிகாரத்துடன்) நீங்கள் சண்டையிடுவீர்களாயின் வெட்கமடைவதற்கு பதிலாக வேறு எதனை உங்களால் பெற முடியும்?

இவ்வாறே நினைவில் கொள்ளுங்கள். இறை நெருக்கத்தைப் பெற்றிருப்பவருடன் சண்டையிடுவதும், போட்டி போடுவதும் இறையச்சமுடையவர்களின் பணியல்ல. அவர்கள் உலகில் பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகின்றார்கள். எனவே நம்பிக்கையாளர்களுடன் போட்டி போடுவதற்கு அஞ்சுங்கள். இறையச்சத்தை மேற்கொள்பவர்களாக ஆகி விடுங்கள். பொய்யர்களாக நீங்கள் வெளிப்பட்டு விடக்கூடாது. பிறகு இந்த தவறின் காரணமாக மிகத் தீய விளைவை நீங்கள் மேற்கொள்ள வேண்டியது ஏற்படலாம். ஏனென்றால் நம்பிக்கையாளர் இறைவனின் ஒளியினால் பார்க்கின்றார். மேலும் அந்த ஒளி உங்களுக்கு கிடைக்கவில்லை. எனவே நீங்கள் கோணலாக செல்லலாம். ஆனால் நம்பிக்கையாளர் எப்போதும் நேராகவே செல்கின்றார். ஒருவர் இருளில் செல்கின்றார். அவர் ஒளியில் செல்லக்கூடிய நபரிடம் போட்டி போட முடியுமா என்பதை நீங்களே கூறுங்கள். ஒருபோதும் முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

هَلْ يَسْتَوِى الْاَعْمٰى وَالْبَصِيْرُ

குருடனும், பார்வையுள்ளவனும் சமமானவர்களா? (6:51) ஒருபோதும் இல்லை. ஆக நாம் இவ்விஷயத்தைப் பார்த்த பிறகும் இதிலிருந்து பயன் பெறாதது எவ்வளவு பெரிய தவறாகும்?

சுருக்கமாக, நம்பிக்கையாளர்களின் அகப்பார்வைக்கு அஞ்சுங்கள். மேலும் நம்பிக்கையாளர்களுடன் போட்டியிடுவதற்காக ஆயத்தமாகுவது அறிவுள்ள மனிதனின் பணியல்ல. நான் தற்போது எடுத்துக் கூறியுள்ள வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டே நம்பிக்கையாளர்களை அடையாளங்கண்டு கொள்ள முடியும். இதே அகப்பார்வையே சஹாபாக்களிடம் காணப்பட்டது. நபிமார்களுடன் இது ஓர் அடையாளமாக வருகின்றது. மேலும் அவர்கள், இது இறை அறிவிப்பு என்றால் பிறகு இதனை நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்று கூறி விடுகின்றனர். அவர்கள் ஒரு வகையான அச்சத்திற்கு ஆளாகி விடுகின்றனர். படித்துக் காட்டுபவரின் கூற்றிற்கேற்ப அந்த கூற்றில் ஒரு மகத்துவமும், அச்சமும் ஏற்படுகின்றது.

பாருங்கள். உலக ஆட்சியாளர்களுக்கு முன்னால் செல்லும்போதும் ஒரு வகையான அச்சம் ஏற்படுகிறது. மேலும் அவர்களிடம் பேனா இருக்கின்றது என்ன எண்ணம் ஏற்படுகின்றது.

இதே போன்று எவர்கள் நம்பிக்கையாளர்களுடன் இறைவன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்கின்றார்களோ அவர்கள் அவரை எதிர்ப்பதை விட்டு விடுகின்றனர். மேலும் அவர்களுக்கு புரியவில்லை என்றால் தனிமையில் அமர்ந்து அதைப் பற்றி சிந்திக்கின்றனர். நபிமொழியில் இவ்வாறு வந்துள்ளது.

اِتَّقُوْا فِرَاسَةَ الْمُؤْمِنِ

அதாவது நம்பிக்கையாளர் எதையாவது கூறுவார் என்றால் பிறகு இறைவனுக்கு அஞ்ச வேண்டும். ஏனென்றால் எதை அவர் கூறுகின்றாரோ அதை இறைவன் தரப்பிலிருந்து கூறுகின்றார்.

நம்பிக்கையாளர் இறைவன் மீது அன்பு கொள்ளும்போது இறை ஒளி அவனிடம் உருவாகின்றது. உதாரணமாக, இரும்பு நெருப்பை தன்னுள் மறைத்துக் கொள்வது போன்று அவர் அந்த ஒளியை தன்னுள் மறைத்துக் கொண்டாலும் அவரிடமிருந்து அது வெளிப்படுகின்றது. எனவேதான் قُلْ اِنَّمَا اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது அவரிடம் மனிதராக இருந்தாலும் அவரது அனைத்து ஆற்றல்களும், அவரது அனைத்து உறுப்புகளும் இறைவனது எண்ணத்திற்கேற்ப மேலும் அவனது விருப்பத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இதுதான் அவரை கோடிக்கணக்கான படைப்பினங்களின் ஆன்மீக நிலைமை மேம்படுத்துவதற்கு பொறுப்பாளியாக ஆக்கி விடுகின்றது. மேலும் அவரை இறைவனின் வல்லமையின் தோற்றமாக ஆக்கி விடுகின்றது. அவ்வாறில்லை என்றால், பிறகு ஒருபோதும் ஒரு நபி இந்த அளவுக்கு படைப்பினங்களுக்கு வழிகாட்டியாக ஆக முடியாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 103,104 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு கொண்ட சஹாபி ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) பின் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் தந்தையான அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் இஸ்லாத்தின் எதிர்ப்பில் மேற்கொண்ட நடவடிக்கையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருடன் கண்டும் காணாமல் நடந்து கொண்டது மற்றும் பரிவுடன் நடந்து கொண்ட சம்பவம் தொடர்பான குறிப்பு**

**கேரளா மாநிலத்தைச் சார்ந்த மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்களது மனைவியான மதிப்பிற்குரிய அம்மத்துல் ஹபீஸ் சாஹிபா, பாகிஸ்தானைச் சார்ந்த அன்ஸாருல்லாஹ் மாதாந்திர பத்திரிகையின் மேனேஜரும், பப்ளிஷருமான மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது இப்ராஹீம் சாஹிப், யூ.கே வின் முன்னாள் வஸிய்யத் செயலரான மதிப்பிற்குரிய ராஜா மஸ்ஊது அஹ்மது சாஹிப் மற்றும் பாகிஸ்தானின் சிந்தைச் சார்ந்த அன்வர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாலிஹா அன்வர் சாஹிபா ஆகியோரது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையையும் ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 நவம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ-الرَّحْمٰنِ الرَّحِيمِ- مٰلِكِ يَوْمِ الدِّينِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ-صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ

பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களின் நற்குறிப்பின் தொடரில் கடைசியாக நான் ஜெர்மனியில் குத்பா கொடுத்திருந்தேன். அதில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) பின் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூலைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன்.

அன்னாரது தந்தையான அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் உஹது போரில் கலந்து கொண்ட சம்பவத்தைப் பற்றிய குறிப்பை பற்றி எடுத்துக் கூறியவாறு குத்பாவை முடித்திருந்தேன்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இளைஞர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டு மதீனாவிற்கு வெளியே சென்று எதிரிகளை எதிர்கொள்ளலாம் என்ற முடிவை எடுத்தபோது, அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் முதலில் தம்முடன் இருந்தவர்களுடன் இணைந்து சென்றார். ஆனால் உஹது மைதானத்தை அடைந்த பிறகு தம்மைச் சார்ந்த 300 நபர்களுடன் ஏமாற்றுதலை வெளிப்படுத்தியவாறு, முஹம்மது (ஸல்) அவர்கள், எனது பேச்சை கேட்கவில்லை. மேலும் நாம் விரும்பியது போன்று மதீனாவில் இருந்தவாறே எதிரிகளை எதிர்கொள்ளவில்லை. இது சண்டையா என்ன? இது நம்மை நாமே அழித்துக் கொள்ளும் விஷயமாகும். எனவே நான் இந்த அழிவில் என்னை நானே ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை என்று கூறியவாறு மதீனாவிற்கு திரும்பினார்.

எவ்வாறிருப்பினும் அவரது உள்ளத்தில் ஆரம்பத்திலிருந்தே நயவஞ்சகத்தனம் இருந்தது. நயவஞ்சகன் கோழையாக இருப்பான். எனவே இவரது கோழைத்தனமும் வெளிப்பட்டது. அவர் தம்மவர்களுடன் திரும்பிச் சென்ற பிறகு முஸ்லிம்களின் எண்ணிக்கை 700 ஆக இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 487)

இருந்தபோதிலும் போர் நடைபெற்ற போது முஸ்லிம்கள் ஏறக்குறைய வெற்றியே பெற்றனர். ஆனால் இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றின்படி செயல்படாததனாலும், மைதானத்தை விட்டு திரும்பிச் சென்றதாலும் மிகப்பெரிய இழப்பை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியது வந்தது. இதற்குப் பிறகு அப்துல்லாஹ் பின் உபை பின் சலூலின் நடவடிக்கை, மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக துன்பத்தைத் தரக்கூடிய மற்றும் எள்ளிநகையாடக்கூடிய சொற்களைப் பேச ஆரம்பித்தார்.

இது தொடர்பான சில விளக்கங்களை தற்போது நான் எடுத்துக் கூறுவேன். இதிலிருந்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் இஸ்லாத்தின் மீதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் கொண்டிருந்த அன்பும் வெளிப்படுகின்றது. மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை இஸ்லாம் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுத்திருந்தால் தமது தந்தைக்கு எதிராகக்கூட எதையும் செய்வதற்கு தயங்க மாட்டார்கள் என்பதும் நிரூபணமாகின்றது.

இது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில், இவர்கள் எவ்வாறு எள்ளிநகையாடினார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

உஹது போருக்குப் பிறகு, மதீனாவின் யூதர்களும், நயவஞ்சகர்களும் பத்ர் போரில் தோல்விடைந்திருந்ததால் தைரியத்தை இழந்திருந்தனர். ஆனால் இப்போது கொஞ்சம் தைரியத்தை வெளிப்படுத்தினர். இன்னும் சொல்வதென்றால் அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவருடன் இருந்தவர்கள் வெளிப்படையாகவே எள்ளிநகையாடவும், குத்திக்காட்டியும் பேசத் தொடங்கினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 506)

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுடன் கண்டும் காணாமல் நடந்து கொண்டார்கள். அன்னார் மென்மையாக நடந்து கொண்டதனால் இந்த மக்கள் வெட்கப்படுவதற்கு பகரமாக எள்ளிநகையாடுவதில் மேலும் முன்னேறினர்.

நயவஞ்கர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபையின் காட்டுமிராண்டித்தனம் மற்றும் அவரது மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு ஆகியவை இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது.

ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வரும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் முராஷி என்ற இடத்தில் சில நாட்கள் தங்கினார்கள். இது பனூ முஸ்தலிக்கின் ஒரு நீரூற்றின் பெயராகும். ஆனால் அங்கு தங்கியிருந்தபோது நயவஞ்கர்கள் தரப்பிலிருந்து எப்படிப்பட்ட ஒரு சம்பவம் அரங்கேறியது என்றால், அதனால் பலவீனமான முஸ்லிம்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டிருக்கும். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் நிலைமைகளை உணர்ந்ததன் காரணமாக, இந்த பித்னாவின் அபாயகரமான தீய விளைவுகளிலிருந்து முஸ்லிம்கள் தப்பித்தனர்.

அந்த சம்பவம் என்னவென்றால், ஜஃஜா என்ற ஹஸ்ரத் உமர் அவர்களின் ஒரு பணியாளர் முராஷி என்ற இடத்தில் தண்ணீர் எடுப்பதற்காக சென்றார். அப்போது அங்கு ஸினான் என்ற பெயருடைய அன்ஸார்களின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரும் தண்ணீர் எடுக்க வந்திருந்தார். இந்த இருவரும் அறிவீனார்கள் ஆவர். அந்த நீரூற்றில் இவர்கள் இருவரும் சண்டையிடத் தொடங்கினர். ஜஃஜா ஸினானை ஒரு அடி அடித்து விட்டார். எனவே ஸினான் உரத்த குரலில் கூச்சலிட ஆரம்பித்தார். அதாவது அன்ஸார்களின் கூட்டத்தினரே! எனக்கு உதவி செய்வதற்கு வாருங்கள். என்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஸினான் தனது சமுதாயத்தை அழைப்பதைக் கண்ட அறிவீனரான ஜஃஜாவும், தமது சமுதாயத்தைச் சார்ந்தவர்களைப் பார்த்து, முஹாஜிரீன்களே! ஓடி வாருங்கள் என்று அழைத்தார்.

அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களின் காதுகளில் இந்த சப்தம் கேட்டதும், அவர்கள் தமது வாள்களை எடுத்துக் கொண்டு இந்த நீரூற்றின் பக்கம் ஓடி வந்தார்கள். இவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கும்போதே இங்கு ஒரு மிகப்பெரிய கூட்டம் ஒன்று கூடியது. சில அறிவீனமான இளைஞர்கள் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுக்கும் நிலை ஏற்பட்டது. ஆனால் அதற்குள் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களைச் சார்ந்த சில புரியும் திறன் கொண்ட, கலப்பற்ற ஸஹாபாக்கள் அங்கு வந்தனர். உடனடியாக அவர்களை தனித்தனியாகப் பிரித்து அவர்களிடம் சமாதானத்தை ஏற்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி சென்றடைந்தும், இது ஒரு அறிவீனத்தின் வெளிப்பாடாகும் என்று கூறினார்கள். மேலும் தனது கோபத்தை வெளிப்படுத்தினார்கள். இவ்வாறு இந்த பிரச்சனை முடிவுக்கு வந்தது.

பனு முஸ்தலிக் போரில் கலந்து கொண்டிருந்த நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபைக்கு இந்த சம்பவம் பற்றிய செய்தி சென்று சேர்ந்ததும், அவன் இந்த பித்னாவை மீண்டும் கிளப்ப விரும்பினான். மேலும் பெருமானார் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக தம்முடன் இருந்தவர்களிடம் தூண்டினான்.

மேலும் இந்த அயோக்கியன் கூறினான்: இவை அனைத்தும் நீங்கள் செய்த தவறினால்தான் ஆகும். நீங்கள் ஆதரவற்ற இந்த முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்து உங்கள் தலை மேல் அமர்த்தி வைத்துள்ளீர்கள். இப்போதாவது அவர்களுக்கு உதவி செய்வதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்தால் இவர்களே மதீனாவை விட்டு சென்று விடுவார்கள்.

மேலும் இந்த தீயவன் இவ்வாறு கூறினான்.

لَئِنْ رَّجَعْنَا إِلَى الْمَدِينَةِ لَيُخْرِجَنَّ الْأَعَزُّ مِنْهَا الْأَذَلَّ (63:9)

இது திருக்குர்ஆனில் சூரத்துல் முனாஃபிக்கூனில் வந்துள்ளது. அதாவது மதீனாவிற்கு திரும்பிச் சென்று கண்ணியத்திற்குரிய கூட்டம் இழிவடைந்த நபர் அல்லது கூட்டத்தை நமது நகரத்திலிருந்து வெளியேற்றுகின்றார்களா? இல்லையா? என்று பாருங்கள்.

அப்போது ஒரு கலப்பற்ற முஸ்லிம் சிறுவன் ஸைது பின் அர்கம் என்பவனும் அங்கு அமர்ந்திருந்தான். அவன் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக அப்துல்லாஹ் கூறிய இவ்வியத்தை செவியுற்றதும் நிம்மதியிழந்தான். மேலும் தமது தந்தையின் சகோதரரின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தியை எட்ட வைத்தான்.

குழந்தைகளும் எந்த அளவுக்கு கலப்பற்றத்தன்மையை கொண்டிருந்தனர். மேலும் எவ்வளவு விழிப்புடன் இருந்தனர். மேலும் எந்த விஷயங்கள் சரியானது? எது தவறானது என்பதை புரிந்திருந்தனர் என்று பாருங்கள்.

எவ்வாறிருப்பினும் அவன் தனது தந்தையின் சகோதரர் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்கள் வரை இந்த செய்தியை எட்ட வைத்தான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஹஸ்ரத் உமர் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இந்த வார்த்தை செவியுற்று கோபத்திலும், உணர்ச்சிவசப்பட்டும் இருந்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! இந்த நயவஞ்சகனின் தலையை துண்டிக்க எனக்கு அனுமதி தாருங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உமரே! அவரை விட்டு விடுங்கள். முஹம்மது அவருடன் இருப்பவர்களை கொலை செய்து திரிகின்றார் என்ற சர்ச்சை ஏற்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களா? என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவருடன் இருப்பவர்களை அழைத்து வரும்படி கூறினார்கள். மேலும் அவர்களிடம், நான் செவியுற்ற இந்த விஷயம் சரியா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனைவரும், நாங்கள் இத்தகைய விஷயங்களைப் பேசவே இல்லை என்று சத்தியம் செய்தனர். சில ஸஹாபாக்கள் இவர்களுக்காக பரிந்துரை செய்தவர்களாக, ஸைது பின் அர்கமிற்கு தவறு ஏற்பட்டிருக்கலாம். இவர் இத்தகைய விஷயங்களை கூறியிருக்க முடியாது என்று கூறினர்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நேரத்தில், அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவருடன் இருந்தவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஸைது அவர்களின் கூற்றை நிராகரித்து விட்டார்கள். இதனால் ஸைதிற்கு மிகவும் கடுமையான துக்கமும், வேதனையும் ஏற்பட்டது. ஆனால் பிறகு ஸைது அவர்களின் கூற்றை திருக்குர்ஆனின் வஹீ ஆமோதித்தது. மேலும் நயவஞ்சர்களின் கூற்றை பொய்ப்படுத்தியது.

பெருமானார் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவர்களுடன் இந்த விஷயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டிருந்த அதேவேளையில் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், அனைவரையும் இங்கிருந்து உடனே புறப்படுமாறு கட்டளையிடுங்கள் என்று கூறினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்து ஏளனம் செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் அதனைவிட்டு வேறெதாவது பேச்சில் ஈடுபடாதவரை நீங்கள் அவர்களுடன் அமராதீர்கள். (4:141)

A.Basheer Ahmad, Melapalayam

அது மதிய நேரமாக இருந்தது. பொதுவாக மதிய வேளையில் பெருமானார் (ஸல்) அவர்கள், மதிய வேளையில் பயணம் மேற்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அரபு நாட்டில் இந்த நேரத்தில் மிகக் கடுமையான வெளியில் இருக்கும். இந்த நேரத்தில் பயணம் செய்வது மிகவும் துன்பத்தை தரக்கூடியதாக இருக்கும். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அப்போதிருந்த நிலைமைகளை கருத்தில் கொண்டவாறு, இப்போது இங்கிருந்து புறப்படுவதுதான் சிறந்தது என்று கருதினார்கள். எனவே அன்னாரது கட்டளைக்கேற்ப இஸ்லாமிய படை திரும்பிச் செல்வதற்கு உடனே ஆயத்தமாகியது.

அந்த சந்தர்ப்பத்தில் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான உஸைது பின் ஹுஸைர் அன்ஸாரி பெருமானார் (ஸல்) அவர்களிடத் வந்து, யா ரஸூலல்லாஹ்! தாங்கள் பொதுவாக இந்த நேரத்தில் பயணம் மேற்கொள்வதில்லையே? இன்று இந்த நேரத்தில் பயணம் செய்ய என்ன நிகழ்ந்து விட்டது? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உஸைதே! அப்துல்லாஹ் பின் உபை என்ன சொற்களை கூறினார் என்பதை நீர் செவியேற்கவில்லையா? மதீனா சென்ற பிறகு கண்ணியத்திற்குரிய நபர் இழிவான நபரை வெளியேற்றி விடுவோம் என்று அவர் கூறுகிறார் என்று அன்னார் கூறினார்கள்.

இதைக் கேட்ட ஹுஸைர் அவர்கள், நபிகள் நாயகமே (ஸல்)! சரிதான். ஆனால் தாங்கள் விரும்பினால் அப்துல்லாஹ்வை மதீனாவிலிருந்து வெளியேற்றி விடலாம். ஏனென்றால் தாங்கள்தான் கண்ணியத்திற்குரியவர் ஆவீர்கள். அவர் அல்ல. அவர்தான் இழிவடைந்தவர் ஆவார் என்று கூறினார்கள்.

மேலும் உஸைது பின் ஹுஸைர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தாங்கள் வருகை தருவதற்கு முன்பாக அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் தமது சமுதாயத்தில் மிகவும் கண்ணியத்திற்குரிய நபராக இருந்தார். அவரது சமுதாயம் அவனை தனது அரசனாக ஆக்குவதற்கான ஆலோசனையை மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் தாங்கள் வருகை தந்த பின்னர் அவரது முயற்சிகள் மண்ணோடு மண்ணாகி விட்டது. எனவே இந்த காரணத்தினால் அவரது உள்ளத்தில் தாங்கள் மீது பொறாமை கொள்கின்றார். எனவே தாங்கள் அவரது வீணான பேச்சை பொருட்படுத்த வேண்டாம். அதை கண்டு கொள்ளாதீர்கள் என்று கூறினார்கள்.

ஆனால் சிறிது நேரத்தில் அப்துல்லாஹ்வின் மகனான குப்பாப் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவரது பெயரை மாற்றி அப்துல்லாஹ் என்று வைத்தார்கள். இந்த அப்துல்லாஹ் அவர்களைப் பற்றியே எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. அவர்கள் ஒரு கலப்பற்ற நபித்தோழர் ஆவார்கள். அவர்கள் பதற்றமடைந்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, யா ரஸூலல்லாஹ்! என் தந்தை செய்த ஃபித்னா மற்றும் அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டதற்காக தாங்கள் அவரை கொலை செய்ய கட்டளை பிறப்பிக்க விரும்புகின்றீர்கள் என்று கேள்விப்பட்டேன். தங்களின் முடிவு இதுதான் என்றால் பிறகு எனக்கு கட்டளையிடுங்கள். நான் எனது தந்தையின் தலையை வெட்டி உங்களது காலடியில் சமர்ப்பிக்கின்றேன். ஆனால் வேறு எவருக்கும் இதற்கான கட்டளையை வழங்காதீர்கள். ஏனென்றால் அறிவீனம் என்னைத் தூண்டி, நான் ஏதாவதொரு நேரத்தில் எனது தந்தையை கொலை செய்தவருக்கு இழப்பை ஏற்படுத்தி விடக்கூடாது. மேலும் நான் இறைவனது திருப்தியை நாடியிருந்தும் நரகத்தில் விழுந்து விடக்கூடாது என்று நான் அஞ்சுகின்றேன். நான் இறைவனது திருப்தியையே விரும்புகின்றேன். ஆனால் ஒரு முஸ்லிமை கொலை செய்து நகரத்தில் நுழைந்து விடுவேன் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களை சமாதானப்படுத்தினார்கள். மேலும் நமது எண்ணம் ஒருபோதும் இது அல்ல. மாறாக, நாம் உமது தந்தையுடன் எப்போதும் மென்மை மற்றும் பரிவுடன்தான் நடந்து கொள்வோம் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உபை அவர்களிடம், தனது தந்தைக்கு எதிராக எந்த அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டு இருந்தார்கள் என்றால், இஸ்லாமிய படை மதீனாவிற்கு திரும்பியபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் தனது தந்தையை வழியில் தடுத்து நிறுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரியவர் ஆவார்கள். மேலும் நான் இழிவானவன் ஆவேன் என்று உங்களது நாவால் எப்போது வரை நீங்கள் கூறவில்லையோ அப்போது வரை நான் உங்களை இங்கிருந்து திரும்பிச் செல்ல விடமாட்டேன் என்று கூறினார்கள்.

அப்துல்லாஹ் அவர்கள் தனது தந்தையிடம் எந்த அளவுக்கு இந்த விஷயத்தை வழியுறுத்திக் கூறினார்கள் என்றால் இறுதியில் அவரும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி அந்த வார்த்தைகளைக் கூறினார். எனவே அப்துல்லாஹ் அவர்கள் அவரது வழியை விட்டு விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 557,559–561)

இப்னு சஅது அவர்கள் இந்த சொற்களில் இந்த சம்பவத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுவதற்காக சஹாபாக்களுக்கு கட்டளை வழங்கினார்கள். அப்போது அப்துல்லாஹ் பின் உபையின் மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் வழிப்பாதையில் தமது தந்தையை தடுத்து நிறுத்தினார்கள். மேலும் ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கினார்கள். மேலும் தனது தந்தையிடம், முஹம்மது (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரியவர் ஆவார்கள். மேலும் நான் இழிவானவன் ஆவேன் என்று கூறாத வரை நான் உங்களை இங்கிருந்து திரும்பிச் செல்ல விடமாட்டேன் என்று கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வழியாக சென்றபோது, அவரை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது வாழ்நாளின் மீது ஆணையாக! இவர் நம்மிடையே உயிருடன் இருக்கும்வரை நிச்சயமாக இவருடன் நாம் நல்ல முறையிலேயே நடந்து கொள்வோம்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 50 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்காத்துல் குப்ராவில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி இந்த குறிப்பும் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தையான அப்துல்லாஹ் பின் உபை, لَيُخْرِجَنَّ الْأَعَزُّ مِنْهَا الْأَذَلَّ அதாவது கண்ணியத்திற்குரிய நபர் அல்லது கூட்டம் இழிவான நபர் அல்லது கூட்டத்தை எங்களது நகரத்திலிருந்து வெளியேற்றி விடும் என்று கூறியபோது, ஹஸ்ரத்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
DOORS & STEELS EXPERT

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அப்துல்லாஹ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! அவர்தான் இழிவானவர் ஆவார். தாங்கள்தான் கண்ணியத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறினார்கள். அதாவது மகன் தனது தந்தையைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 941 அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்து நயவஞ்சகர்கள் தரப்பிலிருந்து ஒரு அசுத்தமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. வதந்தி பரவியது தொடர்பான சம்பவமாகும். பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. அதில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது அசுத்தமான பழி ஒன்று சுமத்தப்பட்டது. இந்த பழியை சுமத்தியதும் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல்தான். இந்த சம்பவம் தொடர்பாக கடந்த வருடத்தின் இறுதியில் நான் ஒரு குத்பாவில் விரிவாக எடுத்துக் கூறி விட்டேன். (குத்பா ஜுமுஆ 14 டிசம்பர் 2018). ஆனால் இது தொடர்பாகவும் இங்கு கொஞ்சம் கூறிவிடுகின்றேன். முழு அறிவிப்பையும் எடுத்துக் கூற மாட்டடேன். சில பகுதிகளை மட்டும் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதாவது பயணத்தில் செல்வதற்கான எண்ணம் கொண்டால் தமது மனைவிமார்களுக்கிடையே சீட்டுக் குலுக்கி போடுவார்கள். மேலும் எவரது பெயரில் சீட்டு வருமோ அவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடன் அழைத்துச் செல்வார்கள். இந்த பயணத்திலும் எங்களுக்கிடையே சீட்டுக் குலுக்கி போடப்பட்டபோது என் பெயரில் சீட்டு வந்தது. நான் அன்னாருடன் சென்றேன். அப்போது பர்தாவிற்கான கட்டளை அருளப்பட்டிருந்தது. பல்லாக்கில் அமர்த்தப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள். ஒரு மூடப்பட்ட நாற்காலி இருக்கும். அதில் அமர்த்தப்படுவார்கள். திரை போடப்பட்டிருக்கும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் திட்டம் முடிந்த பிறகு திரும்பி வந்தார்கள். மேலும் நாங்கள் மதீனாவிற்கு அருகில் இருந்த போது அன்னார் ஓர் இரவு பயணத்தை மேற்கொள்வதற்கான கட்டளையை பிறப்பித்தார்கள். இதற்கான அறிவிப்பு செய்யப்பட்டவுடன் நானும் சென்றேன். பயணக் குழுவினரை விட்டு முந்திச் சென்று விட்டேன். இயற்கை தேவைகளை நிறைவேற்ற வேண்டியதிருந்தது.

எனவே நான் அதற்காக சென்றேன். திரும்பி வந்து எனது நெஞ்சில் கையை வைத்து பார்த்தபோது, எனது கழுத்திலிருந்து ஒரு மாலை அறுந்து விழுந்திருந்தது தெரிய வந்தது. நான் எனது மாலையை தேடுவதற்காக திரும்பிச் சென்றேன். இதற்கிடையில் நான் எந்த பல்லாக்கில் பயணம் மேற்கொண்டேனோ அதில் நான் இருப்பதாகக் கருதி அந்த பல்லாக்கை ஒட்டகத்தின் மீது தூக்கி வைத்துக் கொண்டு சென்று விட்டார்கள். அனைவரும் சென்று விட்டனர். இதற்குப் பிறகு எனது தொலைந்து போன மாலை எனக்கு கிடைத்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் கூடாரமிட்டிருந்த இடத்திற்கு நான் சென்றேன். அங்கு எவருமே இருக்கவில்லை. எனவே அவர்கள் பல்லாக்கைப் பார்த்து நான் இல்லாததைக் கண்டு திரும்பி வருவார்கள் என்று எண்ணியவாறு அங்கேயே அமர்ந்திருந்தேன். அப்போது நான் தூங்கி விட்டேன்.

அப்போது சஃப்வான் பின் முஅத்தல் அவர்கள் படையின் கடைசியில் வருவார்கள். ஏதாவதொரு பொருள் விடுபட்டு விட்டதா என்பதைப் பார்ப்பதற்காக அவர்கள் வந்தார்கள். நாங்கள் எங்கு தங்கினோமோ அங்கு காலைப்பொழுதில் அவர்கள் வந்தார்கள். அப்போது அவர்கள், உறங்கிக் கொண்டிருக்கின்ற ஒருவரைப் பார்த்தார்கள். என்னிடத்தில் வந்தார்கள். பர்தா கட்டளை அருளப்படுவதற்கு முன்பு அவர்கள் என்னைப் பார்த்துள்ளார்கள்.

எனவே அவர்கள் என்னைப் பார்த்ததும், இன்னாலில்லாஹ் என்று கூறினார்கள். அவர்கள் இன்னாலில்லாஹ் என்று கூறியதும் நான் விழித்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தனது ஒட்டகத்தை அமரச் செய்தார்கள். அதில் நான் பயணம் செய்தேன். அவர்கள் ஒட்டகத்தின் கயிறை பிடித்துக் கொண்டு நடந்து வந்தார்கள். நாங்கள் சரியாக மதிய வேளையில் படையைச் சார்ந்தவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அங்கு சென்றோம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் அழிய வேண்டுமோ அவர் அழிந்து விட்டார். அதாவது பழிசுமத்தி தம்மைத்தாமே அழித்துக் கொண்டார். இந்த பழியை சுமத்தியது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல்தான்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: நாங்கள் மதீனா சென்றடைந்தோம். ஒரு மாதம் வரை நோய்வாய்ப்பட்டிருந்தேன். இந்த காரணத்தினால்தான் நோயுற்றிருந்தேன். பழி சுமத்தியவரின் கூற்றையே மக்கள் பேசி வந்தனர். ஆனால் நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, எந்த விஷயம் பேசப்படுகிறது என்பது எனக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் நான் நோய்வாய்ப்படும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் காட்டும் பரிவை இப்போது காட்டாமல் இருப்பது என்னை சந்தேகத்திற்கு ஆளாக்கியது. பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் உள்ளே வருவார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவார்கள். மேலும் எப்படி இருக்கின்றாள்? என்று மட்டும் கேட்பார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: என்மீது சுமத்தப்பட்ட இந்த குற்றச்சாட்டு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. ஒரு நாள் உம்மே மஸ்தஹ் உடன் (இயற்கை தேவைகளை நிறைவேற்றுவதற்காக) நான் வெளியே சென்றேன். அப்போது அவள் என்னிடம் இதைப் பற்றி எடுத்துக் கூறினாள். நான் வீட்டிற்கு திரும்பிச் சென்றது பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறியவாறு, இப்போது எப்படி இருக்கின்றாய்? என்று கேட்டார்கள்.

அதற்கு நான், எனது பெற்றோர்களிடம் என்னை செல்ல விடுங்கள் என்று கூறினேன். அதற்கு அன்னார் அனுமதி வழங்கினார்கள். நான் எனது பெற்றோர்களிடத்தில் சென்றேன். நான் எனது தாயாரிடம், மக்கள் என்ன விஷயங்களைப் பேசுகின்றார்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், மகளே! இந்த விஷயத்தினால் நீ குழப்பத்தில் விழாதே. நீ நிம்மதியாக இரு. மக்கள் இத்தகைய பேச்சுக்களை பேசத்தான் செய்கின்றனர் என்று கூறினார்கள்.


## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியர்க்கு இடையில் சம நிலையில் நடந்து கொள்ள உங்களால் ஒருபோதும் இயலாது. என்றாலும் ஒருத்தியின் பக்கமே முற்றிலும் சாய்ந்து, மற்றொருத்தியை அந்தரத்தில் தொங்க விடாதீர்கள். நீங்கள் உங்களைத் திருத்திக் கொள்ளவும் இறையச்சத்தை மேற்கொள்ளவும் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான் (என்பதை உணர்க). (4:130)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

அதற்கு நான், மக்கள் இத்தகைய பேச்சுக்களையா பேசுகின்றனர்? சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன் ஆவான்) என்று கூறினேன். பிறகு என்மீது இந்த பழி சுமத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து, நான் எனது இரவை அழுதவாறே கழித்தேன். எனக்கு தூக்கமும் வரவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த பேச்சு பேசப்பட்டுக் கொண்டே இருந்தது. சில சஹாபாக்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஆலோசனை செய்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் எனது பணியாளரான பரீராவை அழைத்து, பரீராவே! நீங்கள் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதாவதொரு விஷயத்தை ஆயிஷாவிடம் கண்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு பரீரா, ஒருபோதும் அல்ல. அப்படிப்பட்ட எந்தவொரு விஷயத்தையும் நான் கண்டதில்லை. தங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் ஆயிஷா அவர்களிடம் கண்ட மிகப்பெரிய பலவீனம் இதுமட்டுமே ஆகும். அதாவது அவள் சிறிய வயதுடைய பெண் ஆவாள். விளையாட்டுத்தனம் அவளிடம் இருக்கிறது. மேலும் அதிகமாக தூக்கம் வரும். மேலும் கோதுமையை அப்படியே வைத்து விட்டு சில நேரங்களில் தூங்கி விடுவாள். மேலும் எப்போதாவது வீட்டிற்கு ஆடுகள் வந்தால் அதை சாப்பிட்டு விடும். அதாவது கவனமற்று இருப்பாள். இதை விட வேறு எந்தவொரு விஷயத்தையும் நான் கண்டதில்லை என்று பரீரா கூறினார்கள்.

இதை செவியுற்றதும் பெருமானார் (ஸல்) அவர்கள் அன்றைய தினமே சஹாபாக்களிடம் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் தொடர்பாக, எனது மனைவி தொடர்பாக எனக்கு வேதனையைத் தந்த இந்த நபரை யார் சரி செய்வார்? என்று கேட்டார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது மனைவியிடம் நன்மையைத்தவிர வேறு எதனையும் பார்த்ததில்லை. மேலும் இந்த நபர் எவர் தொடர்பாக பழி சுமத்தியுள்ளாரோ, அவரிடமும் நன்மையைத் தவிர நான் வேறு எதையும் கண்டதில்லை என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் நேரடியாக என்னிடம் இது தொடர்பாக கேட்டார்கள். அதற்கு நான், மக்கள் பேசக்கூடிய பேச்சுக்களை நீங்கள் செவியுற்ற விஷயம் எனக்கு தெரியும். அவர்கள் என்மீது பழி சுமத்துகின்றார்கள். உங்களிடம் நான் குற்றமற்றவள். நான் இத்தகைய செயலை செய்யவில்லை என்று கூறினால், நான் உண்மையானவள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்கள். ஆனால் அல்லாஹ்வே நன்கறிவான். மேலும் நான் குற்றமற்றவள். நான் இத்தகைய செயலை செய்யவில்லை என்பதை அல்லாஹ் நன்கறிவான். எனவே நான் உங்களிடம் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டால் நீங்கள் அதனை உண்மை என்று ஏற்றுக் கொள்வீர்கள். ஏனென்றால் மக்களிடம் இந்த விஷயம் பரவலாக பிரசித்தி பெற்று விட்டது. ஒவ்வொருவரும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர். சில சஹாபாக்களும் கூட இதனைக் கூறுகின்றனர்.

பிறகு ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் யூசுஃப் அவர்களின் தந்தை கூறிய விஷயத்தைத் தவிர வேறு எந்த உதாரணத்தையும் பெறவில்லை. அதாவது அவர் கூறினார்:

فَصَبْرٌ جَمِيلٌ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ

பொறுமையை மேற்கொள்வதே சிறந்ததாகும். நீங்கள் கூறுகின்ற விஷயங்களிலிருந்து அல்லாஹ்விடமே உதவி தேட வேண்டும். இது சூரா யூசுஃப்பில் இடம் பெற்றுள்ளது.

இதற்குப் பிறகு ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அங்கிருந்து விலகியவாறு எனது கட்டிலுக்கு சென்றேன். மேலும் அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் என்னை குற்றமற்றவள் என்பதை நிரூபிப்பான் என்று நம்பியிருந்தேன்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இந்த விஷயத்தை கூறிய பிறகு அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழக்கூட இல்லை.

இந்த விஷயத்தை ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் தமது குடும்பத்தில், அப்போதிருந்த ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஆயிஷா அவர்களின் தந்தையான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்பாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வீட்டிலுள்ளவர்கள் எவரும் வெளியே செல்லவில்லை. அதற்குள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹீ அருளப்பட்டது. வஹீ இறங்கும்போது அன்னாருக்கு கடுமையான கஷ்டம் ஏற்படும். உடல் முழுவதும் வியர்வையினால் நிரம்பி விடும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹீ அருளப்பட்ட பிறகு அன்னார் சிரித்துக் கொண்டிருந்தார்கள். மேலும், ஆயிஷாவே! அல்லாஹ்விற்கு நன்றி செலுத்து. ஏனென்றால் நீ குற்றமற்றவள் என்று அல்லாஹ் நிரூபித்து விட்டான் என்று கூறினார்கள். மேலும் எனது தாயார் என்னிடம், எழுந்து பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் செல் என்று கூறினார்கள். அதற்கு நான், ஒருபோதும் அவர்களுக்கு நான் நன்றி செலுத்த மாட்டேன். அவர்களிடத்தில் எழுந்து செல்ல மாட்டேன். மேலும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் நான் நன்றி தெரிவிக்க மாட்டேன் என்று கூறினேன்.

அல்லாஹ் இந்த வஹீயை அருளினான்.

إِنَّ الَّذِيْنَ جَاءُوْا بِالْإِفْكِ عُصْبَةٌ مِّنْكُمْ (24:12)

அதாவது ஒரு பெரும் பொய்யைப் புனைந்துரைத்தவர்கள் நிச்சயமாக உங்களைச் சேர்ந்த ஒரு பிரிவினரே.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கனவின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவதொரு வகையில் காட்டுவான் என்று நான் எண்ணினேன். ஆனால் திருக்குர்ஆனின் வசனங்கள் இது தொடர்பாக அருளப்படும் என்று நான் கருதவில்லை.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஷ் ஷஹாதத்.... ஹதீஸ் எண் 2661)

எவ்வாறிருப்பினும் இந்த பிரச்சனை முடிவு பெற்றது. இந்த குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு வந்தது. மேலும் பல்வேறு வகையான செயல்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகும் அகிலங்களுக்கே அருட்கொடையாக திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் தலைவனுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை அப்துல்லாஹ் பின் உபை மரணமடைந்தபோது, ஹஸ்ரத் அப்துல்லாஹ்

## திருக்குர்ஆனிலிருந்து...

வானங்களிலும், பூமியிலுமுள்ளவை (எல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன. பாதுகாப்பாளனாக விளங்க அல்லாஹ்வே போதுமானவன். மக்களே! அவன் விரும்பினால் உங்களை அழித்துவிட்டு, வேறு மக்களை கொண்டுவந்து விடுவான். அல்லாஹ் அவ்வாறு செய்ய முழு ஆற்றல் பெற்றவனாவான். (4:133,134)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, தனது தந்தையின் ஜனாஸா தொழுகையை தொழ வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். மேலும் தந்தையை கஃபன் செய்வதற்காக தங்களது மேலங்கியை கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு குர்தாவை வழங்கினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இந்த சொற்களும் வருகிறது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை மரணமடைந்தபோது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, எனது தந்தையை கஃபன் செய்வதற்காக உங்களது மேலங்கியைத் தாருங்கள். மேலும் ஜனாஸா தொழுகை தொழ வையுங்கள். மேலும் அவருக்காக இஸ்திஃபார் செய்யுங்கள் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்காக தமது மேலங்கியைக் கொடுத்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், கஃபன் செய்து அனைத்து பணிகளும் முடிந்த பிறகு என்னை அழையுங்கள் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழ வைக்க முற்பட்டபோது ஹஸ்ரத் உமர் அவர்கள், நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதற்கு அல்லாஹ் உங்களை தடுத்துள்ளான் என்று கூறினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், இவர்களுக்காக இஸ்திஃபார் செய்வதா? வேண்டாமா? என்பதற்காக எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்காக ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். அதற்குப் பிறகு இத்தகைய நபர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதற்கு அல்லாஹ் முற்றிலும் தடை செய்து விட்டான். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதை முற்றிலும் நிறுத்தி விட்டார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 941 அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பும் வந்துள்ளது. அதாவது அவன் கபரில் வைக்கப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு வந்தார்கள். அன்னார் அவனை வெளியே எடுக்கச் செய்து தமது உமிழ்நீரை அவனது வாயில் இட்டார்கள். மேலும் துஆ செய்தார்கள். மேலும் தமது மேலங்கியை கழற்றி கொடுத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1350)

இன்னொரு அறிவிப்பு இவ்வாறும் வருகிறது. அதாவது ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள். பத்ர் போர் நடைபெற்ற போது காஃபிர்களின் கைதிகள் கொண்டு வரப்பட்டனர். மேலும் அப்பாஸ் அவர்களும் கொண்டு வரப்பட்டார்கள். அவரிடத்தில் எந்த ஆடையும் இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்காக ஆடையை தேடினார்கள். மக்கள் அப்துல்லாஹ் பின் உபை யின் மேலங்கியை அவருக்கு பொருந்தும் வகையில் இருப்பதைக் கண்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அதனையே அவரை அணியச் செய்தார்கள். மேலும் இதன் காரணமாகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உபை மரணித்த பிறகு அவனுக்கு தமது மேலங்கியை வழங்கி விட்டார்கள்.

இப்னு உயைனா கூறுகின்றார்கள்: அவன் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அவர் நல்ல முறையில் நடந்து கொண்டார். எனவே அன்னாரும் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள்.

(புகாரி கிதாபுல் ஜிஹாத்.... ஹதீஸ் எண் 3008)

ஆனால் இது புகாரியின் அறிப்பாக இருந்தாலும் சரியாக இருப்பதாக தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகிலங்களுக்கு அருட்கொடையாக திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் இதை செய்திருக்கலாம். மேலும் மகன் எல்லா விவகாரத்திலும் இஸ்லாத்திற்காக தன்மான உணர்வை வெளிப்படுத்தினார். பெருமானார் (ஸல்) அவர்களுக்காகவும் வெளிப்படுத்தினார். மேலும் தனது ஈமானை பாதுகாத்தார். தனது தந்தையிடம் கடுமையையும் காட்டினார். எனவே அன்னார் மகனின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காக தமது மேலங்கியை கழற்றிக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் கூறுகின்றார்கள்: அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் மரணமடைந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது ஹஸ்ரத் உமர் அவர்களின் அறிவிப்பாகும். அன்னார் இதனை நேரடியாகவே அறிவித்துள்ளார்கள். அதாவது தாங்கள் அவரது ஜனாஸா தொழுகையை தொழ வையுங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தொழ வைப்பதற்காக நின்றபோது நான் அவர்கள் அருகில் சென்று, யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தாங்கள் இப்னு உபையின் ஜனாஸாவை தொழ வைக்கின்றீர்கள். அவன் இன்ன இன்ன நாட்களில் இன்ன இன்ன விஷயங்களையெல்லாம் கூறினான். நான் அவனுக்கு எதிராக அவன் கூறிய கூற்றுக்களை எண்ணத் தொடங்கினேன்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தவாறு, உமரே! விலகி நில்லுங்கள் என்று கூறினார்கள். நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறினேன். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நான் எழுபது முறையை விட அதிகமாக இஸ்திஃபார் செய்வதால் இவன் மன்னிக்கப்படுவான் என்பதை நான் அறிந்தால் அதைவிட அதிகமாக நான் கண்டிப்பாக செய்வேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் அவரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். பிறகு அன்னார் திரும்பி வந்த சிறிது நேரத்திலேயே சூரா அத் தவ்பாவின் இந்த இரண்டு வசனங்கள் அருளப்பட்டன.

وَلَا تُصَلِّ عَلٰٓى اَحَدٍ مِّنۡهُمۡ مَّاتَ اَبَدًا وَّلَا تَقُمۡ عَلٰى قَبۡرِهٖ ؕ اِنَّهُمۡ
كَفَرُوۡا بِاللّٰهِ وَرَسُوۡلِهٖ وَمَاتُوۡا وَهُمۡ فٰسِقُوۡنَ (9:84)

அதாவது அவர்களுள் எவர் மரணமடைந்து விட்டாலும் அவருக்காக நீர் ஒருபோதும் (ஜனாஸா தொழுகை) தொழ வேண்டாம். அவரது கல்லறையில் (பிரார்த்தனை செய்ய) நிற்கவும் வேண்டாம். ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நிராகரித்தனர். மேலும் அவர்கள் கட்டுப்படாத நிலையில் மரணமடைந்தனர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சியம் கூறுபவர்களாயிருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும் ஏழையாயினும் சரி. (4:136)

Faizal Hameed Ilahi, Tittacherry

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு நான், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்பாக எவ்வாறு எனது இந்த தைரியத்தை வெளிப்படுத்தினேன் என்பதைக் கண்டு வியப்படைந்தேன். அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிவார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1366)

இது ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் நற்குறிப்பில் உள்ள சம்பவங்களாகும். அது தற்போது முடிவடைந்து விட்டது. எஞ்சியிருக்கக்கூடிய சஹாபாக்களைப் பற்றி பிறகு எடுத்துக் கூறுவனே்.

இப்போது வஃபாத்தான சிலரது குறிப்பை எடுத்துக் கூறுவேன். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

இவர்களில் முதலாவது குறிப்பு, மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அம்மத்துல் ஹஃபீஸ் சாஹிபா அவர்களுடையதாகும். 20 அக்டோபர் அன்று 72 வது வயதில் இவர்களது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

1947 ஆம் ஆண்டு கேரளாவில் பிறந்தார்கள். மர்ஹூமாவின் குடும்பத்தில் அவர்களது பாட்டனாரின் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் கேரளாவின் ஆரம்ப கால அஹ்மதிகளில் ஒருவர் ஆவார்கள். சென்னையில் செகரட்டரி மால் ஆகவும், கேரளாவில் நீண்ட காலமாக சத்ர் லஜ்னாவாகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்துள்ளது. திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் தஹஜ்ஜுத் தொழுவதை தொடர்ச்சியாக பேணி வந்தார்கள். லஜ்னா மற்றும் நாஸிராத்துகளுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்து வந்தார்கள். கடமையான மற்றும் உபரியான நோன்புகளை வைத்து வந்தார்கள். தமது வாழ்நாளின் இறுதி வரை மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்களுக்கு அதிக தொண்டாற்றி உள்ளார்கள்.

விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராக இருந்தார்கள். மனித இனத்திற்கு தொண்டு செய்யும் உணர்வு மிகைத்திருந்தது. நல்ல பெண்மணி ஆவார்கள். கிலாஃபத்துடன் ஆழமான கொள்கைப்பிடிப்பின் தொடர்பு இருந்தது. எங்கெல்லாம் இவர்கள் இருந்தார்களோ அங்கு மிஷன் ஹவுஸிற்கு வரக்கூடிய உறுப்பினர்களுடன் கலப்பற்ற தொடர்பைக் கொண்டிருந்தார்கள். கலப்பற்ற முறையில் தொண்டாற்றி வந்தார்கள்.

மரணமடைவதற்கு முன்பாக மூன்று முறை மாரடைப்பு ஏற்பட்டிருந்தது. மூன்றாவது முறை அவர்களுக்கு மாரடைப்பு வந்தபோது மவ்லவி உமர் சாஹிப் அவர்களிடம், எனது மரணம் நெருங்கி விட்டது. எனது சலாத்தை அனைவருக்கும் எட்ட வையுங்கள் என்று கூறினார்கள். உரத்த குரலில் அல்லாஹு அக்பர் என்று மூன்று முறை கூறினார்கள். இவ்வாறு அவர்கள் அல்லாஹ்விடம் சென்று விட்டார்கள்.

மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். தமக்குப் பிறகு நான்கு மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள். நமது PS அலுவலகத்தில் தமிழ் கடிதங்கள் தொடர்பாக பணிகளை தன்னார்வத் தொண்டாக செய்து வரும் முனவ்வர் அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்களின் மாமியார் ஆவார்கள்.

மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 1961 ஆம் ஆண்டு நான் மவ்லவி பட்டம் பெற்ற பிறகு அஹ்மதிய்யா மதரஸாவில் படித்துக் கொடுப்பதற்காக எனது முதல் பணியமர்த்தம் செய்யப்பட்டது. பிறகு ஹைதராபாதிற்கு பணிநியமனம் செய்யப்பட்டேன். அப்போது அங்கு 1967 ஆம் ஆண்டு ஹைதராபாதில் கடுமையான மழை ஏற்பட்டது. ஜூப்ளி ஹாலில் இருக்கின்ற முதல் தளத்தில் வழிபாட்டுத் தளமும், அலுவலகமும் கட்டப்பட்டிருந்தது. இரண்டாவது தளத்தில் லஜ்னா இமாயில்லாஹ்விற்காக இருந்தது. மூன்றாவது தளம் மிஷன் ஹவுஸ் இருந்தது. இந்த ஹாலின் பெரும் பகுதி மழையின் காரணமாக இடிந்து விட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் நான் அங்கு இருக்கவில்லை. மதிய வேளையில் மிஷஹ் ஹவுஸிற்கு வந்து பார்த்தபோது வியப்படைந்தேன். அதாவது முழுக் கட்டடமும் இடிந்து விட்டது. கட்டடத்தின் ஒரே ஒரு ஓரம் மட்டும் விழாமல் இருந்தது. எனது மனைவி 3 வயது குழந்தையை தூக்கிக் கொண்டு மூன்றாவது தளத்திலுள்ள அந்த ஓரத்தில் எவ்வித ஆதரவுமின்றி நின்று கொண்டிருந்தார். இத்தகைய சூழ்நிலையில் எனது மனைவியும், மகளும் தப்பிப்பது வெளிப்படையாக நடக்காத ஒன்றாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்கு அவர்கள் நின்று கொண்டிருந்தார்களோ அதற்கு கீழே கட்டடங்களின் தூண்கள் இருந்தன. எனவே கீழேயும் குதிக்க முடியாது. கீழே இறங்குவதற்கான எந்த வழியும் தென்படவில்லை. தீயணைப்பு படை சார்பாக ஒரு ஏணி கொண்டு வரப்பட்டது. ஆனால் ஏணியில் ஏறி தாயையும், மகளையும் காப்பாற்றும் தைரியம் எவருக்கும் இருக்கவில்லை. அப்போது ஒரு தீயணைப்பு வீரர், எனது உயிர் பிரிந்தாலும் நான் இந்த தாயையும், மகளையும் காப்பாற்ற முயற்சி செய்வேன் என்று கூறினார். எனவே அவர் ஏணியில் ஏறி முதலில் மகளை கீழே இறக்கினார். பிறகு தாயை இறக்கினார். எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறு அற்புதமான முறையில் இருவரது உயிரும் தப்பித்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எல்லா இடத்திலும் மிகவும் பொறுமையுடன் என்னுடன் ஒத்துழைத்தார்கள். நான் கேரளாவிற்கு பணியமர்த்தப்பட்டபோது 15 ஆண்டு கேரளா மாநிலத்தின் தலைவியாக தொண்டாற்றியுள்ளார்கள். மிக சிறந்த முறையில் தொண்டாற்றினார்கள்.

மவ்லவி உமர் சாஹிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆக இருந்தபோது 2007 முதல் 2014 வரை காதியானில் இருந்தார்கள். அப்போது ஒவ்வொரு நாளும் துஆ செய்வதற்காக பைத்துத் துஆ செல்வார்கள். பிறகு 2015 ஆம் ஆண்டு உம்ரா செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

உமர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: தினமும் ஃபஜர் தொழுகையை தொழுத பிறகு திருக்குர்ஆனை ஓதுவார்கள். மேலும் ஹதீஸை படிப்பார்கள். இது அவர்களது வழக்கமாக இருந்தது. இவர்கள் மரணமடைந்த நாளிலும் இதன்படி செயல்படுவதற்கான பாக்கியத்தை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கினான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படிப்பதில்


## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கையாளர் என்ற நிலையில் நற்செயல்களைச் செய்பவர்கள், ஆணாயினும், பொண்ணாயினும் சொர்க்கத்தில் நுழைவார்கள். இம்மியளவும் அநீதியிழைக்கப்பட மாட்டாது. (4:125)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

ஆர்வம் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமின்றி அறிவார்ந்த நூல்களை பெறுதற்கு குறிப்பான ஆர்வம் இருந்தது. மேலும் இதுவே ஒரு முரப்பியின் மனைவியின் சிறப்பம்சமாக இருக்க வேண்டும். அது அல்லாஹ்வின் அருளால் அவர்களிடம் இருந்தது.

முரப்பி மற்றும் பொறுப்பாளர்களின் அந்தஸ்தை புரிந்தவாறு அவர்களுக்கு கண்ணியம் அளிக்கும் பெண்மணியாக திகழ்ந்தார்கள். விருந்தினர்களை உபசரிப்பதில் எந்த குறைவும் வைக்க மாட்டார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும், மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. இவர்களது சந்ததிகளை இவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

இரண்டாவது ஜனாஸா, பாகிஸ்தானின் அன்ஸாருல்லாஹ் மாதாந்திர பத்திரிகையின் முன்னாள் மேனேஜரும், பப்ளிஷருமான மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 16 அக்டோபர் அன்று தமது 83 வது வயதில் இவர்களது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

1957 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலுள்ள ரப்வாவில் செகரட்டரி அன்ஸாருல்லாஹ் ஆக இவர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டார்கள். 1960 ஆம் ஆண்டு அன்ஸாருல்லாஹ் மாதாந்திர பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் மேனேஜர் மற்றும் பப்ளிஷராக அன்னார் நியமிக்கப்பட்டார்கள். 2004 ஆம் ஆண்டு வரை இந்த பணியை சிறப்பாக நிறைவேற்றி வந்தார்கள். பாகிஸ்தான் அன்ஸாருல்லாஹ்வில் அன்னாருக்கு, அலுவலக நிர்வாகியாகவும், சத்ர் மஜ்லிஸின் நாயிப் காயிது உமூமி செகரட்டரி ஆகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது.

2003 ஆம் ஆண்டு இவர்கள் மீது பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. பிறகு இவர்கள் எனது அனுமதியுடன் லண்டன் குடிபெயர்ந்தார்கள். இங்கும் அன்ஸாருல்லாஹ்வில் ஏறக்குறைய 8,9 ஆண்டுகள் தொண்றாற்றும் பாக்கியத்தைப் பெற்றார்கள். தேசிய செயற்குழுவின் உறுப்பினர் ஆவார்கள்.

மர்ஹூம் மூஸி ஆவார்கள். சில நாட்களுக்கு முன்பாக நோயின் காரணமாக ரப்வா சென்றார்கள். அங்குதான் மரணமடைந்துள்ளார்கள். தமக்குப் பின்னால் 1 மகளையும், 5 மகன்களையும் எண்ணற்ற பேரன், பேத்திகளை விட்டுச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும், மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. இவர்களது பிள்ளைகளுக்கும், இவர்களது சந்ததிகளுக்கும் இவர்களது நன்மையை தொடரச் செய்யவும், ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இவர்கள் அன்ஸாருல்லாஹ் பத்திரிகையை மேனேஜராக இருந்தபோது ஒவ்வொரு விஷயத்திற்காகவும் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு வந்தது. ஏறக்குறை 26 வழக்குகள் தொடரப்பட்டன. மேலும் ஒரு மாதம் வரை அல்லாஹ்வின் வழியில் சிறைச்சாலையிலும் இருந்துள்ளார்கள்.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய மர்ஹூம் ராஜா முஹம்மது நவாஸ் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ராஜா மஸ்ஊது சாஹிப் அவர்களுடையதாகும். 19 அக்டோபர் அன்று நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக தனது 69 வது வயதில் இவர்களது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இவர்களது குடும்பத்தில் அன்னாரது தந்தையின் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. 1933–1944 வரை அந்த காலத்தில் ராஜா முஹம்மது அலி சாஹிப் அவர்கள் நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்தார்கள். அவர்களுடன் இவர்களது தொடர்பு இருந்தது. அன்னாரது தந்தையை இவர்கள் காதியான் ஜல்ஸாவிற்கு அழைத்துச் சென்றார்கள். மேலும் அங்குதான் அவர்கள் பைஅத் செய்தார்கள். எவ்வித ஆதாரத்தையும் பார்க்காமல் ஒரு சம்பவத்தின் மூலமாக பைஅத் செய்தார்கள்.

அது என்னவென்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது கூறினார்கள்: ஒரு அழுக்கு நிறைந்த ஆடைகளை அணிந்திருக்கின்ற மகனை தூக்கிக் கொண்டு வருகின்ற அழகிய தோற்றத்தை கொண்ட ஒரு இளைஞரை நான் பார்த்தேன். அவனது மூக்கிலிருந்து சளி வந்தபோது அவர் தனது கைக்குட்டையை எடுத்து அவனது மூக்கை சுத்தம் செய்தார்.

மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, சிறிது நேரதில் ஒரு குழந்தை அழுதது. அன்னார் பின்னால் திரும்பி பார்த்து, துலைந்து போன ஒரு குழந்தை இங்கு உள்ளது. பெற்றோர்கள் வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று அறிவிப்பு செய்தார்கள்.

எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: பிறகு நான் இந்த தூய்மையான ஆடையை அணிந்திருக்கின்ற இந்த இளைஞர் யார்? என்று அறிய முற்பட்டேன். அதற்கு அவர், இது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மூத்த மகன் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் ஆவார்கள். இப்போது சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆவார்கள் என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடத்தில் எந்த அளவுக்கு தாக்கம் ஏற்பட்டது என்றால் மற்ற விஷயங்கள் எல்லாம் அப்புறம்தான். நான் இன்று பார்த்த முன்மாதிரியினால் பைஅத் செய்கின்றேன்.

எனவே ஜல்ஸாவில் கலந்து கொள்கின்றவர்களில் சில மக்கள் இந்த முன்மாதிரிகளைப் பார்த்துதான் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றனர்.

எவ்வாறிருப்பினும் 1991 ஆம் ஆண்டு யூகே வந்து விட்டார்கள். கேட்ஃபோர்டின் ஜமாஅத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். தமது வீட்டையும் ஜமாஅத் சென்டராக பயன்படுத்தி வந்தார்கள். இங்கு வந்து அன்ஸாருல்லாஹ்வின் காயித் உமூமி ஆகவும், அடிஷனல் செகரட்டரி வஸாயாவாகவும், நேஷனல் செகரட்டரி வஸாயாவாகவும் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

நான் வஸிய்யத் அமைப்புபை சிறப்பாக ஆக்குவது தொடர்பாக கூறினேன். எனவே இவர்கள் அதற்காக பெரும் முயற்சி செய்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் அமைப்பை வலுப்படுத்தினார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு இருந்தது. ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு கண்ணியமும் வழங்கி

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவர். மனப்பூர்வமாக சந்தா கொடுக்கக் கூடியவர். தான தர்மங்களை செய்யக் கூடியவர். ஏழைகளை பேணக் கூடியவர். சிரித்த முகத்துடன் சந்திக்கக் கூடியவர். அல்லாஹ்வின் அருளால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னார் தனது மனைவி மட்டுமின்றி ஒரு மகளையும், இரண்டு மகன்களையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் இவர்களுடன் கருணையுடனும், மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

என்னுடன் காலேஜில் ஒன்றாக இணைந்து படிக்கவில்லை என்றாலும் நான் காலேஜில் படித்த போது அவர்களும் அந்த காலேஜில் படித்தார்கள். இந்த அடிப்படையில் காலேஜில் என்னுடன் ஒரே வகுப்பில் ஒன்றாக படித்து வந்தார்கள் என்று நம்மால் கூற முடியும். அங்கு அவர்களுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. உருது வகுப்பு மட்டும் ஒன்றாக நடத்தப்பட்டு வந்தது. நாங்கள் ஒன்றாகவே அமர்ந்திருப்போம். அந்த நேரத்திலும் அவர்களிடம் மிகப் பெரும் சிறப்பம்சங்களை நான் அவர்களிடம் பார்த்துள்ளேன். தனது பணியில் மட்டும் அவர்கள் ஈடுபாட்டுடன் செய்து வந்தார்கள். எவரது பணி குறித்தோ, எவருடனும் தவறாகவோ நடந்தது கிடையாது. அல்லாஹ் அவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக.

அல்லாஹ் பக்ஷ் சாதிக் சாஹிப் வகீலுத் தஃலீம் ரப்வா அவர்கள் எழுதுகின்றார்கள்: மிகவும் தைரியமானவர். தன்மான உணர்வு கொண்ட அஹ்மதி ஆவார். ஜஹ்லம் நகரத்தின் பள்ளிவாசல் மிகவும் பழமையானதாகும். 84 ற்குப் பிறகு அசாதாரணமான சூழ்நிலை இருந்தது. இந்த சட்டத்திற்கு பிறகு ஜமாஅத்துகளில் பள்ளிவாசல்கள் கட்டப்பட முடியாது. சீரமைப்பையும் மேற்கொள்ள முடியாது. ஆனால் ராஜா சாஹிப் மிகவும் தைரியத்துடன் பள்ளிவாசலை கட்டும் பணியை தாமே பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அமீர் சாஹிப் அவர்களுடன் ஆலோசனை செய்து இந்த பணியை முழுமை செய்தார்கள். தெருவின் பக்கம் அங்குள்ள சுவர்களை எதுவும் செய்யாமலேயே வரைபடத்திற்கேற்ப கட்டினார்கள். மிகச்சிறந்த முறையில் மாடியை கட்டினார்கள். இதில் மிகப்பெரும் பொருள் தியாகமும் செய்துள்ளார்கள். நேரத்தையும் தியாகம் செய்துள்ளார்கள். மக்களுக்கும் கவனமூட்டினார்கள். இவ்வாறு பள்ளிவாசலை முழுக்க முழுக்க புதிய வடிவில் மாற்றினார்கள். இப்போது இறைவனது அருளால் பள்ளிவாசலுக்கு மேலேயும் கீழேயும் இரண்டு ஹால்கள் இருக்கின்றன.

நான்காவது ஜனாஸா சிந்து மாகானத்தைச் சார்ந்த அன்வர் அலி அபூ சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாலிஹா அன்வர் அபூ சாஹிபா அவர்களுடையதாகும். இவர்களும் நவம்பர் 1 ஆம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

தைரியமிக்க, இறைவணக்கம் செலுத்தக்கூடிய, அல்லாஹ்விற்கும் அவனது படைப்பினங்களுக்கும் தொண்டாற்றக்கூடிய பெண்மணி ஆவார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே தொழுகை, நோன்பை பேணி வந்தார்கள். சந்தாவையும் செலுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் உண்மையான தொடர்பு இருந்தது. இவர்களது தந்தை ஈரானிலிருந்து ரிடாயிர்ட்மண்ட் வாங்கி விட்டு நவாப் ஷா வந்து குடியேறினார்கள். அப்போது அவர்களுக்கு குறைந்த பாக்கெட் மணியே கிடைத்து வந்தது. அதிலிருந்து அவர்கள் சந்தா செலுத்தி வந்தார்கள்.

ஒரு முறை லஜ்னாவின் ஒரு பொறுப்பாளர் தலைமையகத்திற்கு சென்றார்கள். அங்கு நடந்த கூட்டத்தில் அனைத்து லஜ்னாக்களிடமும் கூறினார்கள்: முழு நவாப் ஷாவிலும் லஜ்னா இமாயில்லாஹ்வின் சந்தா செலுத்துவதில் இந்த குழந்தை தான் அதிகம் செலுத்துகிறது. இது இவர்களது திருமணத்திற்கு முந்தைய சம்பவமாகும்.

அவர்களது மகளான தாஹிரா முஃமின் கூறுகின்றார்கள்:

திருமணத்திற்குப் பிறகு அல்லாஹ் எண்ணற்ற அருள்களை செய்தான். அவ்வாறே அல்லாஹ் அவர்களுக்கு பரந்த உள்ளத்தையும் வழங்கினான். எளிமை மற்றும் பணிவுடன் நடக்கக் கூடியவர். சந்தாவின் ஒவ்வொரு திட்டத்திலும் பங்கு பெறுபவர். அதிகமான சந்தாவை வாக்குறுதியாக எழுதி வந்தார்கள். நீண்ட காலமாக லாட்கானா மாவட்டத்தின் தலைவியாக இருந்துள்ளார்கள். சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், சந்தா தொடர்பாக வழியுறுத்திக் கூறுவார்கள். அதனால் நல்ல விளைவுகள் வெளிப்படும். ஏனென்றால் அவர்களது முன்மாதிரியும் நல்லதாக இருந்தது. மிகவும் தைரியமிக்க, தன்மான உணர்வு கொண்டவர் ஆவார்கள். அப்போது சிந்தில் நாகரீகமற்ற சுற்றுச்சூழலிலும் சடங்கு சம்பிரதாயத்திலிருந்து மிக விலகியே இருந்தார்கள். எளிமையாக வாழ்க்கையை கழித்தார்கள். ஒவ்வொருவருடனும் உளப்பூர்வமான தனது தொடர்வை வைத்திருந்தார்கள்.

அவர்களது மகள் எழுதுகின்றார்கள்: எங்கெல்லாம் இவர்கள் இருந்தார்களோ அங்குள்ள லஜ்னா உறுப்பினர்கள் இவர்களை அதிகமாக நினைவு கூர்வார்கள். மேலும் எங்களுக்கு எப்போது கஷ்டம் ஏற்பட்டாலும் அவர்களிடம் கூறுவோம். அவ்வாறு கூறும்போது, தொழுகை மேற்கொள்ளுங்கள். மேலும் துஆ செய்யுங்கள் என்றே அறிவுறித்து வந்தார்கள். பிறகு அவர்களும் எங்களுக்காக அதிகமாக துஆ செய்வார்கள். மிக நல்ல தொடர்வை வைத்திருந்தார்கள். எந்த ஹல்காவிற்கு சென்றாலும் உளப்பூர்வமாக பழகுவார்கள்.

அல்லாஹ் இவர்களது குழந்தைகளிடத்திலும் கலப்பற்றத்தன்மையையும், பற்றுணர்வையும் உருவாக்குவானாக. இவர்களுடன் கருணையுடனும், மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. இவர்கள் செய்ததுபோன்று இவர்களது பிள்ளைகளும் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களாகவும், தியாகங்கள் செய்பவர்களாகவும் திகழட்டுமாக. அவர்கள் செய்த துஆக்களை அவர்களது பிள்ளைகளின் ஹக்கில் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக. இவர்களுக்கு ஒரு இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர்.

தொழுகைக்குப் பிறகு நான் கூறியதுபோன்று இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு பின்னர் நிராகரித்துப், பின்னர் நம்பிக்கை கொண்டு, பின்னரும் நிராகரித்துப், பின்னர் நிராகரிப்பில் (மேலும்) முன்னேறி விடுகின்றவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அவர்களுக்கு (ஈடேற்றத்திற்குரிய) எந்த வழியையும் காட்டவும் மாட்டான். (4:138)

M.Y. Shahul Hameed, Melapalayam

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு கொண்ட சஹாபியும், பெருமானார் (ஸல்) அவர்களின் அம்பு எய்யும் வீரருமான ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**நமது அனைத்து பொறுப்பாளர்களும் இதனை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். ஒன்று, பொறுப்புக்கு ஆசைப்படக் கூடாது. அதிகாரியாக ஆக்கப்பட்டால் மேலும் பதவி வழங்கப்பட்டால் அல்லாஹ்விடம் அந்த பதவியின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் தம்மிடத்தில் ஒருபோதும் ஆணவத்தை உருவாக்காமல் இருக்க அவனுடைய அருளை வேண்ட வேண்டும்**

**அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்ளும் நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதன் உரிமையை செலுத்துகின்ற நற்பாக்கியத்தையும் நமக்கு வழங்குவானாக. மேலும் நாம் நம்மிடத்தில் இறையச்சத்தை உருவாக்கிக் கொள்வதற்கான நற்பாக்கித்தையும் நமக்கு வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 22 நவம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ரி சஹாபாக்களின் நற்குறிப்பின் வரிசையில் இன்று நான் ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் அல்லது அசல் பெயரான மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் தந்தையார் பெயர் அம்ர் ஆகும். அன்னார் பனீ சஃலபா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அந்த அடிப்படையில் அன்னாரின் தந்தையார் பெயர் அம்ர் பின் சஃலபா ஆகும். எனினும் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களை அஸ்வத் பின் யகூஸை சார்ந்தவர் என்று கூறப்படுகின்றது. ஏனென்றால் அவர் அன்னாரை குழந்தைப் பருவத்தில் தனது வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொண்டிருந்தார். எனவே மித்தாத் பின் அஸ்வத் என்ற பெயரால் அன்னார் பிரபல்யமடைந்திருந்தார்கள்.

(சுனன் திர்மிதி.... ஹதீஸ் எண் 2393 & இப்னு ஹிஷாம் பக்கம் 151... – 2009 ஆம் ஆண்டு தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் தந்தையான அம்ர் பின் சஃலபா அவர்கள் பஹ்ரா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அக்கோத்திரம் யமன் பகுதியில் கஸாஆ என்ற ஊரை சார்ந்த கோத்திரமாக இருந்தது. அறிவீனமான காலத்தில் அன்னாரின் தந்தை அம்ர் அவர்களின் கரங்களால் ஒரு நபர் கொலையுண்டார். அதன் காரணமாக அன்னார் அங்கிருந்து ஓடி கடற்கரையின் ஓரத்தில் அதன் என்ற பகுதியின் கிழக்கில் அமைந்திருந்த மஷ்த் என்ற ஊருக்கு ஓடி விட்டார்கள். அங்கு சென்று கந்தா என்ற கோத்திரத்துடன் இணைந்து கொண்டார்கள். அதன் காரணமாக கிந்தி என்றும் அன்னார் அழைக்கப்பட்டார்கள். அங்கு ஒரு பெண்மணியை அம்ர் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அவருக்கு ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் பிறந்தார்கள்.

மித்தாத் அவர்கள் பெரியவர் ஆனதும் அபூ ஷமர் பின் ஹிஜ்ர் ஹிந்தி என்ற ஒரு நபருடன் சண்டை ஏற்பட்டது. அன்னார் ஷமர் என்பவரின் கால்களை வாளால் வெட்டி விட்டார்கள். பின்னர் மக்காவிற்கு ஓடி வந்து விட்டார்கள். அங்கு வந்து அஸ்வத் பின் அப்தே யகூஸ் என்ற கோத்திரத்துடன் இணைந்து கொண்டார்கள். மிக்தாத் அவர்கள் தனது தந்தைக்கு கடிதம் எழுதினார்கள். அதன் மூலமாக அவர்களும் மக்காவிற்கு வந்து விட்டார்கள். அஸ்வத் என்பவர் மிக்தாதை தனது வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொண்டார். அதன் காரணமாக அன்னாரது பெயர் மிக்தாத் பின் அஸ்வத் என்றும் அழைக்கப்பட்டது. மேலும் பொதுவாக இதே பெயரிலேயே அன்னார் பிரபல்யமடைந்திருந்தார்கள். ஆனால் 'உத்வூஹும் லி ஆபாயிஹும்' அதாவது, 'அவர்களை அவர்களின் தகப்பனாரின் பெயர்களால் அழையுங்கள்' என்ற வசனம் இறங்கியதும் அன்னார் மிக்தாத் பின் அம்ர் என்று அழைக்கப்பட்டார்கள்.ஆனால் அன்னார் மிக்தாத் பின் அஸ்வத் என்ற பெயரிலேயே பிரபல்யமடைந்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும் 'உத்வூஹும் லி ஆபாயிஹும்' அதாவது அவர்களை அவர்களின் அசல் தந்தையின் பெயரால் அழையுங்கள் என்பது இறை கட்டளையாகும். எனவே அவர்களின் அசல் தந்தையின் பெயரிலேயே வளர்ப்புப் பிள்ளைகள் அழைக்கப்பட வேண்டும்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் சுட்டுப் பெயர் அபூ மஃபத் மட்டுமின்றி அபூ அஸ்வத், அபூ அம்ர் மற்றும் அபூ சயீது என்றும் கூறப்படுகின்றது.

ஒரு முறை ஹஸ்ரத் மிக்தாத் அவர்களும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று அன்னாரிடம் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள், நீங்கள் கேட்கின்றீர்கள். அப்படி என்றால் நீங்கள் ஏன் உங்களது மகளை மணமுடித்துக் கொடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் கோபமடைந்தார்கள். மேலும் அன்னாரை திட்டி விட்டார்கள்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் இதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் முறையிட்டார்கள். அதற்கு நான் உங்களது திருமணத்தை நடத்தி வைக்கின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சிறிய தந்தையான ஹஸ்ரத் சுபைர் பின் அப்துல் முத்தலிஃப் அவர்களின் மகளான ஸபாஆ அவர்களுடன் அன்னாருக்கு திருமணம் முடித்து வைத்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 5 பக்கம் 213 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 311 – பைரூத்திலுள்ள தாருல்

குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & இப்னு ஹிஷாம் பக்கம் 151 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 85 மக்தாத் பின் அம்ர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 160 மிக்தாத் பின் அஸ்வத் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸபாஆ, ஹஸ்ரத் சுபைர் மற்றும் ஆதிக்கா பின்த் வஹப் ஆகியோரின் மகளாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை ஹஸ்ரத் மிக்தாத் அவர்களுடன் திருமணம் முடித்து வைத்தபோது அவர்களுக்கு கரீமா மற்றும் அப்துல்லாஹ் என்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தன. அப்துல்லாஹ் அவர்கள் ஒட்டகப் போரில் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களின் பக்கம் நின்று போராடி ஷஹீதானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸபாஆ அவர்களுக்கு கைபரிலிருந்து 40 விஸ்க் அளவு பேரீத்தம் பழங்களை வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 8 பக்கம் 38 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது சுமார் 150 மண் அளவு என்று கூறப்படுகிறது. அதாவது சுமார் 600 கிலோ அளவு ஆகும்.

(லுகாதுல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 487 'விஸ்க்' – லுகாதுல் ஹதீஸ் தொகுதி 2 பக்கம் 648 'சாஹ்')

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களுக்கு மஃபத் என்ற ஒரு மகனும் இருந்தார்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 207 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் மகளாகிய கரீமா அவர்கள் அன்னாரின் உருவத் தோற்றத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள். ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் மிக உயரமானவர்களாகவும், அன்னாரின் நிறம் கோதுமை நிறமாகவும் இருந்தது. வயிறு பெரியதாகவும், தலையில் அதிகமான முடியும் இருந்தது. அன்னார் தனது தாடிக்கு மருதாணி பூசி வந்தார்கள். அது அழகுடையதாக பார்க்கப்பட்டது. அன்னாரின் கண்கள் கருமையாக இருந்தன. புருவம் மெல்லியதாகவும் நீளமாகவும் இருந்தன.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 87 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அறிவிக்கின்றார்கள். மக்காவில் இஸ்லாத்தை முதன் முதலில் வெளிப்படுத்திய 7 சஹாபாக்களில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களும் ஒருவராக இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 243 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்களைப் பற்றிய குறிப்பில் இதைப்பற்றிய விளக்கத்தை நான் ஏற்கனவே ஒரு முறை எடுத்துரைத்துள்ளேன்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற குறிப்பும் வருகிறது. அதாவது அபிஸீனியாவை நோக்கிய ஹிஜ்ரத் செய்த முஸ்லிம்களில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களும் அடங்குவார்கள். சில காலம் கழித்து அன்னார் மக்காவிற்கு திரும்பி வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் மிக்தாத் அவர்களால் ஹிஜ்ரத் செய்ய முடியவில்லை. எனவே ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் தலைமையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிய குழு ஒன்றை அனுப்பும் வரை மக்காவிலேயே தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் மிக்தாத் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரும் உரிய சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இக்ரிமா பின் அபூ சுஃப்யானின் படையில் இணைந்து கொண்டார்கள். இதைப் பற்றிய விளக்கத்தையும் நான் ஏற்கனவே எடுத்துரைத்துள்ளேன்.

(அஸதுல் காபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 242 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்கள். அதை சுருக்கமாக இங்கு எடுத்துரைத்து விடுகின்றேன்.

வாதன் என்ற போரிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரபீயுல் அவ்வல் மாதத்தின் ஆரம்பத்தில் திரும்பி வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நெருங்கிய உறவினரான உபைது பின் ஹாரிஸ் மத்லபி அவர்களின் தலைமையில் 60 முஹாஜிரீன்களைக் கொண்ட குழுவினரை அனுப்பி வைத்தார்கள். தற்காத்துக் கொள்வதும், மக்கத்து குரைஷிகளின் தாக்குதலை தடுத்து நிறுத்துவதும் அக்குழுவை அனுப்பியதன் நோக்கமாக இருந்தது. ஹஸ்ரத் உபைதா பின் அல்ஹாரிஸ், அவர்களும் அன்னாரின் தோழர்களும் சில தூரத்தைக் கடந்து ஸனீயத்துல் மர்ரா என்ற இடத்தை அடைந்தபோது குரைஷிகளின் ஆயுதங்களை ஏந்திய 200 இளைஞர்கள் இக்ரிமா பின் அபூ ஜஹிலின் தலைமையில் அங்கு முகாமிட்டிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டனர். ஒருவர் மற்றொருவருக்கு இடையிலான இந்த சண்டையில் அம்புகளும் எய்யப்பட்டன.

ஆனால் முஷ்ரிகீன்களின் அந்த கூட்டம் அச்சத்திற்கு உள்ளானது. முஸ்லிம்களின் படை பின்னால் வந்து இணைந்து விடுமோ என்று அச்சத்திற்கு உள்ளானார்கள். அல்லது முஸ்லிம்கள் ஒளிந்திருப்பார்களோ என்றும் அஞ்சினார்கள். எனவே முஸ்லிம்களை எதிர்கொள்வதிலிருந்து பின் வாங்கினார்கள். முஸ்லிம்களும் அவர்களை பின்தொடரவில்லை.

எனினும் முஷ்ரிகீன்களின் படையிலிருந்து மிக்தாத் பின் அம்ர் மற்றும் உத்பா பின் கஸ்வான் என்ற இருவரும் இக்ரிமா பின் அபூ ஜஹிலின் படையிலிருந்து விலகி முஸ்லிம்களுடன் வந்து இணைந்து கொண்டார்கள். அவர்கள் இதே நோக்கத்துடன் குரைஷிகளுடன் படையுடன் வந்திருந்தார்கள். அதாவது சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஏனென்றால் அவர்கள் உள்ளத்தால் முஸ்லிமாக இருந்தனர். எனினும் தங்களின் பலவீனத்தின் காரணமாக குரைஷிகளுக்கு அஞ்சி வந்தனர். அவர்களால் ஹிஜ்ரத் செய்ய முடியாமல் இருந்தது. இந்த சம்பவம் குரைஷிகளை சோர்வடையச் செய்தது. அவர்கள் தீய சகுனமாக பார்த்து பின் வாங்க வேண்டும் என்ற முடிவை எடுத்திருந்தார்கள்.

வரலாற்றில் இந்த சம்பவத்தைப் பற்றி தெளிவான குறிப்பு இல்லை. குரைஷிகளின் இந்த படை வணிகக் குழுவாக இருந்திருக்கவில்லை. மேலும் இப்னு இஸ்ஹாக் அவர்கள்

இப்படையை, பெரும் படை என்று குறிப்பிடுகின்றார்கள். ஒரு குறிப்பான நோக்கத்துடன் அந்த படை வந்திருந்தது. அவர்களின் நோக்கம் நல்ல நோக்கமாக இருந்திருக்கவில்லை என்பது உறுதியான ஒன்றாகும். மேலும் முஸ்லிம்கள் விழிப்புடன் இருப்பதைப் பார்த்தும், தங்களது படையிலிருந்து சிலர் முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டதையும் பார்த்து அவர்களின் மன வலிமை குன்றியது. மேலும் அவர்கள் பின்வாங்கி விட்டார்கள். இது இறைவனின் அருளாக இருந்தது. சஹாபாக்களுக்கு இந்த திட்டத்தின் மூலமாக கிடைத்த வெளிப்படையான நன்மை என்னவென்றால், இரண்டு முஸ்லிம் ஆன்மாக்கள் குரைஷிகளின் அநீதியிலிருந்து இரட்சிப்பை பெற்று விட்டன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 328,329)

மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் அவர்கள், ஹஸ்ரத் குல்ஹூம் பின் அதம் அவர்களின் வீட்டிலேயே தங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மிக்தாத் மற்றும் ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹல் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் பனூ அதீலா கோத்திரத்தின் கிளை கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தின் தெருக்களில் அன்னார் தங்குதவற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அதற்குரிய இடத்தையும் அன்னார் வழங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் அபீ பின் கஅப் அவர்கள் அன்னாரை அந்த தெருக்களில் வசிப்பதற்காக அழைப்பு விடுத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 86 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக இரவில் பால் வழங்கி வந்த அந்த சஹாபியைப் பற்றி ஹதீஸில் குறிப்பு வந்துள்ளது. அந்த பாலை அந்த சஹாபியே அருந்தி விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக வைக்கப்பட்ட பால் அருந்தப்பட்டது. அந்த சம்பவம் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களுடன் தொடர்புடையதாக இருந்தது.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் இது பற்றி அறிவிக்கின்றார்கள். நானும் எனது இரண்டு நண்பர்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்தோம். எங்களது காதும், கண்களும் கடின உழைப்பின் காரணமாக பாதிப்பிற்கு உள்ளாகி இருந்தது. நாங்கள் எங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களுடன் சேர்த்துக் கொள்ளும்படி செய்தோம். நாங்கள் யாராவது ஒருவருடன் இணைந்து கொள்வோம். ஆனால் அவர்கள் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றோம். அன்னார் எங்களை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு மூன்று ஆடுகள் இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த ஆடுகளின் பால் நம் அனைவருக்கும் உரியதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் பாலை கறந்தோம். எங்களில் ஒவ்வொருவரும் தமக்குரிய பங்கை அருந்தினார். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குரிய பங்கை வைத்து விட்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் வருகை தருவார்கள். உறங்கிக் கொண்டிருப்பவர் விழித்திராத வகையிலும், விழித்திருப்பவர் கேட்கும் வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சலாம் கூறுவார்கள். பின்னர் பள்ளிவாசலுக்கு சென்று விடுவார்கள். அங்கு சென்று தொழுது விட்டு தனது பங்கிற்குரிய பாலை அருந்துவார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு நாள் இரவு ஷய்த்தான் என்னிடத்தில் வந்தான். அதாவது ஷய்த்தானிய எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றியது. நான் எனக்குரிய பங்கை அருந்தி இருந்தேன். ஷய்த்தான் கூறினான்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்ஸார்கள் அன்பளிப்பு கொடுப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பங்கிற்காக பால் வைப்பதற்கு எந்த அவசியமும் இல்லை என்று ஷய்த்தான் கூறினான்.

எனவே நான் அதை எடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பங்காக வைக்கப்பட்டிருந்த அந்த பாலை எடுத்து குடித்து விட்டேன். பால் எனது வயிற்றுக்குள் சென்று விட்டது.

இது அரபிகள் தங்களின் கூற்றை எடுத்துரைக்கும் ஒரு வழிமுறையாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பால் எனது வயிற்றில் சென்று விட்டது. நீ அதனை திரும்பப் பெறுவதற்கு எந்த வழியும் இல்லை. அது இனி திரும்ப வரவும் செய்யாது என்பதை நான் அறிந்து கொண்டேன். ஷய்த்தான் என்னை தலை குனியச் செய்தான். உமக்கு நாசம் உண்டாகட்டுமாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்த பாலை நீர் அருந்தி விட்டீரே! அன்னார் வந்து பார்க்கும்போது தமக்குரிய பங்கை அவர்கள் காண மாட்டார்கள். எனவே அன்னார் உமக்கு எதிராக துஆ செய்வார்கள். மேலும் நீர் அழிந்து விடுவீர். உமது இம்மையும் மறுமையும் நாசமாகி விடும் என்றும் கூறினார். ஷய்த்தான் தலைகுனிவை உண்டாக்கினான்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் உள்ளத்தில் ஷய்த்தான் இந்த எண்ணத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தி இருந்தான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்அன்னாருக்கு எதிராக பத்துஆ செய்வார்கள் என்று கூறி இருந்தான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ ரஹ்மத்துல் லில் ஆலமீனாக இருந்தார்கள். அவ்வாறிருக்க இந்த ஒரு சிறிய விஷயத்திற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு பத்துஆ செய்வார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு எதிராக பத்துஆ செய்வார்கள் என்பது கூட ஷய்த்தானின் ஒரு தீய எண்ணமாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தால் நான் அழிந்து விடுவேன் என்று எனது உள்ளத்தில் எண்ணம் வந்தது. எனது இம்மையும் மறுமையும் நாசமாகி விடும் என்று நான் அஞ்சினேன். என்னிடத்தில் ஒரு போர்வை ஒன்று இருந்தது. அதனை நான் எனது கால்களில் போர்த்தினால் தலை வெளியில் இருக்கும். தலை மீது போர்த்தினால் எனது கால்கள் வெளியே தெரியும். எனக்கு தூக்கம் வராமல் இருந்தது. என்னுடைய இரண்டு நண்பர்களும் உறங்கி இருந்தனர். அவர்கள் நான் செய்ததை செய்திருக்கவில்லை. நானோ பாலை அருந்திருந்தேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வருகை தந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி சபைக்கு வந்தார்கள். அதன் பிறகு பள்ளிவாசலுக்கு சென்றார்கள். தொழுதார்கள். அதாவது நஃபில் தொழுதார்கள். பின்னர் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருந்த பாலின் பக்கம் வந்தார்கள். பாத்திரத்தின் மூடியை திறந்தார்கள். அதில் ஒன்றும் இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விண்ணை நோக்கி பார்த்தார்கள். இப்போது எனக்கு எதிராக துஆ செய்வார்கள் என்று நான் எண்ணினேன். ஏனென்றால் அதனை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

எனவே இப்போது எனக்கு எதிராக துஆ செய்யப்படும். மேலும் நான் அழிந்து விடுவேன் என்று எண்ணம் தோன்றியது. ஆனால்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ أَطْعِمْ مَنْ أَطْعَمَنِيْ، وَأَسْقِ مَنْ أَسْقَانِيْ

அதாவது அல்லாஹ்வே! நீ எனக்கு உணவளித்தவருக்கு நீ உணவளிப்பாயாக. மேலும் எனக்கு அருந்த கொடுத்தவருக்கு நீ அருந்தக் கொடுப்பாயாக.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இதனைக் கேட்ட பிறகு எனது போர்வையை என் மேல் நன்றாக கட்டிக் கொண்டேன். நான் விழித்துக் கொண்டிருந்தேன். நான் கத்தி ஒன்று எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன். வெளியில் ஆடுகள் நின்று கொண்டிருந்தன. அதில் நல்ல கொழுத்த ஆடு ஒன்றை நோக்கி முன்னேறினேன். அதனை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அறுக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். நான் அங்கு சென்றபோது அதனுடைய மடுவில் பால் நிறைந்திருப்பதை நான் கண்டேன்.

இன்னும் சொல்வதென்றால், அங்கிருந்த அனைத்து ஆடுகளின் மடுவும் பாலால் நிறைந்திருந்தன. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிலிருந்து ஒரு பாத்திரத்தை எடுத்து வந்தேன். அதில் நான் பாலைக் கரந்து நிரப்பி விடுவேன் என்பதை சற்றும் எண்ணிக் கூட பார்த்ததில்லை. நான் அதில் பாலை கரந்தேன். எந்த அளவுக்கு என்றால் பாத்திரத்தின் மேலே வரை நுரை வந்தது. பாத்திரம் பாலால் நிரம்பியது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். அப்போது நீங்கள் இன்று இரவு எனக்குரிய பங்கில் உள்ள பாலையும் சேர்த்து அருந்தி விட்டீர்களா என்று அன்னார் என்னிடத்தில் கேட்டார்கள்.

அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அதைப்பற்றி எதையும் என்னிடத்தில் கேட்காதீர்கள். இதோ இந்த பாலை அருந்துங்கள் என்று கொடுத்தேன். அன்னார் அதனை குடித்த பிறகு என்னிடத்தில் கொடுத்து விட்டார்கள்.. நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதனை குடியுங்கள் என்று கூறினேன். அன்னார் மீண்டும் அருந்தினார்கள். பின்னர் மீண்டும் என்னிடத்தில் தந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் எவ்வளவு அருந்த வேண்டுமோ அதனை அருந்தி விட்டார்கள். அன்னாரின் வயிறு நிரம்பி விட்டது என்ற உணர்வு என்னிடத்தில் ஏற்பட்டது. மேலும் நான் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆவை பெற்று விட்டேன் என்றும் எண்ணினேன். எனக்கு அருந்த கொடுத்தவருக்கு நீ அருந்தக் கொடுப்பாயாக. எனக்கு உணவளித்தவருக்கு நீ உணவளிப்பாயாக என்பதே அன்னாரின் துஆவாக இருந்தது. இப்போதுதான் நான் அன்னாருக்கு பால் அருந்தக் கொடுத்துள்ளேன். மேலும் துஆவையும் பெற்றுக் கொண்டேன் என்பதை எண்ணி சிரித்து விட்டேன்.

எந்த அளவுக்கு நான் சிரித்தேன் என்றால் நான் என்னையும் அறியாமல் தரையில் அமர்ந்து விட்டேன். சிரித்து சிரித்து எனது நிலை மோசமானது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக்தாதே! இது உம்முடைய விளையாட்டா? என்று கேட்டார்கள். அன்னாரின் சிரிப்பைப் பார்த்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் ஏதோ சேட்டை செய்துள்ளதாக தெரிகிறதே என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரிடத்தில் நானும் எனது தோழர்களும் செய்தவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறினேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது அல்லாஹ்வின் புறமிருந்து இறங்கிய கருணையாகும். இதை ஏன் நீங்கள் முன்னரே கூறவில்லை என்று கேட்டார்கள். அவ்வாறு கூறியிருந்தால் நமது ஏனைய நண்பர்களையும் எழுப்பி இருக்கலாமே? அவர்களும் இதிலிருந்து ரஹ்மத்தின் பங்கை பெற்றிருப்பார்களே? என்று கூறினார்கள்.

அதற்கு மிக்தாத் அவர்கள் கூறினார்கள்: உங்களை உண்மையுடன் அனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அந்த ரஹ்மத்தை பெற்று விட்ட பிறகு உங்களது தோழர்களும் அந்த ரஹ்மத்தை பெற்று விட்டார்கள். மக்களில் எவர் அதனைப் பெறுகின்றார் என்ற கவலை எனக்கு கிடையாது. நான் என்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஏனென்றால் நான் குற்றம் இழைத்திருந்தேன். (சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 2055)

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அம்பு எய்யும் வீரர்களைச் சார்ந்தவராவார் என்றும் கூறப்படுகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 86 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அறிவிக்கின்றார்கள். பத்ர் போரின்போது ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் அவர்களின் ஒரு விஷயம் பற்றிய காட்சியைக் கண்டேன். அது எனக்கு கிடைத்திருந்தால் நற்கூலியில் அதற்கு சமமான மற்ற அனைத்து நன்மைகளை விடவும் அதுவே எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாக இருந்திருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஷ்ரிகீன்களுக்கு எதிராக துஆ செய்து கொண்டிருந்தபோது அன்னாருக்கு அருகில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் மூஸாவின் சமுதாயம் கூறியதைப் போன்று உங்களிடம் கூற மாட்டோம்.

فَاذْهَبْ اَنْتَ وَ رَبُّكَ فَقَاتِلَا ۔ وَلٰكِنَّا نُقَاتِلُ عَنْ يَمِيْنِكَ وَعَنْ شِمَالِكَ وَبَيْنَ يَدَيْكَ وَخَلْفَكَ

அதாவது நீரும் உமது இறைவனும் இருவரும் சென்று போரிடுங்கள் என்று கூறியதைப் போன்று நாங்கள் கூற மாட்டோம். மாறாக, நாங்கள் உங்களுக்கு வலப் புறமும், இடப் புறமும், முன்பும் பின்பும் நின்று போரிடுவோம். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை பார்த்தேன். அன்னாரின் முகம் பொலிவுடன் இருந்தது. மிக்தாத் அவர்களின் இந்த கூற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 3952)

இதைப் பற்றிய சிறிது விளக்கம் சீரத் காத்தமுன் நபிய்யீன் புத்தகத்தில் பத்ர் போர் தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது எதிரிகளின் வருகை தொடர்பான செய்தியை அறிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் எண்ணங்களை அறிந்து கொள்வதற்கும், அவர்கள் தாக்குதல் நடத்த வந்துள்ளார்கள் என்றால் அதனை தடுத்து நிறுத்துவதற்கும் பத்ர் மைதானத்தை நோக்கி குழு ஒன்றை அனுப்பினார்கள். ரவ்ஹா என்ற இடத்திற்கு அருகில் சென்று அன்னார் பஸீஸ் மற்றும் அதீ என்ற பெயருடைய இரண்டு சஹாபாக்களை எதிரிகளின் நடமாட்டம் பற்றி அறிந்து வரும்படி அனுப்பி வைத்தார்கள். மேலும் விரைவாக செய்தி சேகரித்து வரும்படியும் கூறி அனுப்பினார்கள். ரவ்ஹா என்ற இடத்தைக் கடந்து முஸ்லிம்கள் சஃப்ரா என்ற பள்ளத்தாக்கை அடைந்தார்கள். பின்னர் ஸஃப்ரான் என்ற இடத்தை அடைந்தபோது அவர்களுக்கு தகவல் கிடைத்தது. குரைஷிய குழுவின் பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திய ஒரு பெரும் படை மக்காவை நோக்கி வந்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து சஹாபாக்களையும் ஒன்று கூட்டி அவர்களுக்கு அதைப் பற்றிய தகவலைக் கொடுத்தார்கள். மேலும் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் ஆலோசனையும் கேட்டார்கள். சில சஹாபாக்கள் வெளிப்படையான காரணிகளை கருத்தில் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பயணக் குழுவை வெளியில் சென்று எதிர்கொள்வதே சிறந்ததாகும். அவர்கள் வணிகக் குழுவினரா? அவர்களின் நோக்கம் என்ன என்று நாம் நேரில் பார்க்க வேண்டும். அவர்கள் போருக்காக வரும் படையினர் என்றால் அவர்களை எதிர்கொள்வதற்கு நாம் முழுமையாக ஆயத்தமாக இல்லை என்று கூறினார்கள்.

ஆனால் இந்த கருத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. மதீனாவிலிருந்து வெளியேறும்போது அன்னாருடன் வந்த பெரும்பாலான சஹாபாக்களுக்கு போருக்கான சூழலும் உருவாகும். நாம் போருக்காக செல்கின்றோம் என்பது தெரியாது. மாறாக, ஒரு வணிகக்குழு வருகிறது. அதன் நிய்யத் என்ன? என்பதையும் அறியவும், ஒருவேளை அவர்கள் தாக்குதல் தொடுத்தால் அவர்கள் சிறிய வணிகக் குழுவினராக இருக்கலாம். எனவே நாம் அவர்களுடன் போர் செய்யலாம் என்று எண்ணியே சஹாபாக்கள் வந்திருந்தனர். ஆனால் ஒரு பெரும் படையைப் பற்றியும் முறையான போர் பற்றியும் மதீனாவை விட்டு வெளியேறியபோது அந்த சஹாபாக்கள் எண்ணிக் கூட பார்த்ததில்லை.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்ட போது, படையை நம்மால் எதிர்கொள்ள முடியாது. நாம் போர் புரிய வேண்டாம் என்று சில சஹாபாக்கள் கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த கருத்தை விரும்பவில்லை. மற்றொரு பக்கம் பெரும் சஹாபாக்கள், இந்த ஆலோசனை கேட்ட போது எழுந்து நின்று, உயிரை தியாகம் செய்கின்ற அளவில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலும், எங்களது உயிரும், செல்வமும் அனைத்தும் இறைவனுக்கு உரியது என்று கூறினார்கள். மேலும் நாங்கள் எல்லா மைதானத்திலும் அனைத்து தொண்டிற்காகவும் தயாராக இருக்கின்றோம் என்றும் கூறினார்கள்.

மிக்தாத் பின் அம்ர் என்ற மற்றும் ஒரு பெயர் கொண்ட மிக்தாத் பின் அஸ்வத் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் மூஸாவின் சமுதாயத்தைப் போன்று நீங்களும், உமது இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கேயே அமர்ந்திருப்போம் என்று கூற மாட்டோம். மாறாக, நாங்கள் கூறுவது என்னவென்றால், நாங்கள் எங்கு செல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அங்கு நாங்கள் செல்வோம். நாங்கள் உங்களது வலப்புறமும், இடப்புறமும், உங்களுக்கு முன்பும், பின்பும் நின்று போர் செய்வோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை கேட்டவுடன் அன்னாரது முகம் மலர்ச்சியடைந்தது. மகிழ்ச்சியால் நிறைந்தது. இந்த விவகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் பதிலையும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். அன்ஸார்களும் தமது கருத்தை கூற வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். ஏனென்றால் பைஅத்தே உக்பாவின் அடிப்படையில் மதீனாவில் தாக்குதல் நடைபெற்றால் அதை அப்போது நாங்கள் அதற்கு பாதுகாப்பு வழங்குவோம் என்றே உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனவே அந்த அளவில்தான் நமக்கு கடமை உள்ளது என்று ஒருவேளை அன்ஸார்கள் புரிந்திருக்கலாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எண்ணினார்கள்.

எனவே மிக்தாத் அவர்களின் உயிர் தியாகம் தொடர்பான சொற்பொழிவைக் கேட்ட பிறகும் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராகிய சஅது பின் மஆஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணத்தை புரிந்து கொண்டார்கள். இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களை உண்மையாளர் என்று புரிந்து கொண்டு தான் ஈமான் கொண்டுள்ளோம். நாங்கள் எங்களது கரத்தை உங்களது கரத்தில் ஒப்படைத்து விட்டோம். எனவே இப்போது நீங்கள் எங்களை எங்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றீர்களோ அங்கு அழைத்து செல்லலாம். உங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக! நீங்கள் எங்களை கடலில் குதிக்கும்படி கூறினால் நாங்கள் கடலில் குதித்து விடுவோம். மேலும் எங்களில் ஒருவர் கூட பின்தங்க மாட்டார். நீங்கள் எங்களை இன்ஷா அல்லாஹ் போரில் பொறுமையாளர்களாக காண்பீர்கள். மேலும் உங்களது கண்களுக்கு குளிர்ச்சியூட்டும் விஷயத்தை எங்களிடத்தில் நீங்கள் காண்பீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் பெயரைக் கூறி முன்னேறுங்கள். மகிழ்ச்சியடையுங்கள். ஏனென்றால் அல்லாஹ் என்னிடத்தில் வாக்குறுதி அளித்துள்ளான். நிராகரிப்பாளர்களின் அந்த இரு பிரிவுகளில் அதாவது படை அல்லது வணிகக் குழு ஆகிய இரண்டில் ஒன்றின் மீது நிச்சயமாக வெற்றியை நாம் வழங்குவோம் என அல்லா என்னிடம் வாக்குறுதி வழங்கியுள்ளான். இறைவன் மீது ஆணையாக! எதிரிகளின் படையினர் கொல்லப்பட்டு வீழ்த்தப்படும் இடத்தை நான் தற்போது கண்டு கொண்டிருக்கின்றேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 354,355)

அடுத்து ஹஸ்ரத் மிக்தாத் அவர்களைப் பற்றி இவ்வாறும் வருகின்றது. பத்ர் போரில் அல்லாஹ்வின் வழியில் குதிரையில் சவாரி செய்து போரிடுவதற்கான பாக்கியம் அன்னாருக்கு கிடைத்திருந்தது. அவரின் குதிரையின் பெயர் சப்ஹா ஆகும்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பத்ர் போரின்போது முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகள் இருந்ததாக குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுவதாக வருகின்றது. பத்ர் போரின் நாளில் எங்களிடத்தில் இரண்டு ஒட்டகங்கள் இருந்தன. ஒன்றின் மீது ஹஸ்ரத் சுபைர் அவர்களும் மற்றொன்றின் மீது ஹஸ்ரத் மிக்தாப் பின் அஸ்வத் அவர்களும் இருந்தார்கள்.

இப்னு ஹிஷாம் அவர்கள் பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களிடம் மூன்று குதிரைகள் இருந்தன. ஹஸ்ரத் முர்ஷது பின் அபூ முர்ஷது அவர்களிடம் ஒரு குதிரை இருந்தது. அதன் பெயர் சுபுல் ஆகும். மிக்தாத் பின் அம்ர் அவர்களிடம் மற்றொரு குதிரை இருந்தது. அதன் பெயர் பிஅஸ்ஜா அல்லது சப்ஹா ஆகும். மற்றொரு குதிரை ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களிடம் இருந்தது. அதன் பெயர் யாஸூப் ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 86 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 452 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்றின் அடிப்படையில் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற

புத்தகத்தை எழுதியுள்ளார்கள். அதன் அடிப்படையில் பத்ர் போரில் முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகளே இருந்தன என்று எழுதியுள்ளார்கள். சில புத்தகங்களில் மூன்று என்றும், ஐந்து என்றும் குறிப்பு கிடைக்கின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 353 & அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 205 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் குதிரைகள் இரண்டாக இருக்கட்டும்; மூன்றாக இருக்கட்டும்; ஐந்தாக இருக்கட்டும். நிரூபிக்கப்பட்ட சான்று என்னவென்றால், நிராகரிப்பாளர்களின் போர் தளவாடங்களுக்கு எதிரில் முஸ்லிம்கள் நிராயுதபானியாகவே இருந்தார்கள். முஸ்லிம்களுக்கும் நிராகரிப்பவர்களுக்கும் இடையே ஒப்பீடே செய்ய முடியாது. எனினும் எதிரிகளை எதிர்கொள்வதற்காக அவர்கள் ஆயத்தமானார்கள். முஹாஜிரீன்களும், அன்ஸார்களும் தாங்கள் செய்த வாக்குறுதியை முழுமை செய்து காட்டினார்கள்.

ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் ஹிந்தி பனு சஸ்ரா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்ட மக்களையும் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிராகரிப்பாளர்களில் ஒருவருடன் எனக்கு போர் நடந்து நாங்கள் இருவரும் சண்டையிட்டு அந்த சண்டையில் அவன் எனது ஒரு கையை தனது வாளால் வெட்டி விட்டு பின்னர் ஒரு மரத்திற்கு பின்னால் அவன் ஒளிந்து கொண்டு நான் அல்லாஹ்விற்காக முஸ்லிமாகி விட்டேன் என்று கூறினால் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்போது நான் அவனைக் கொலை செய்து விட வேண்டுமா? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் அவரைக் கொலை செய்யக் கூடாது என்று கூறினார்கள். அதற்கு மிக்தாத் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, அவன் எனது ஒரு கையை வெட்டியுள்ளான். அதன் பிறகு அவன் முஸ்லிமாகி விட்டேன் என்று கூறினான் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவனைக் கொலை செய்யக்கூடாது. ஏனென்றால் நீங்கள் அவனை கொலை செய்து விட்டால் கொலை செய்வதற்கு முன்னர் உங்களுக்கு எந்த அந்தஸ்து கிடைத்திருந்ததோ அதனை அவர் பெற்று விடுவார். அதாவது ஈமானிய அந்தஸ்தில் உங்களுடைய இடத்தில் அவரும், கலிமா கூறுவதற்கு முன்பாக அவர் இருந்த அந்தஸ்தில் நீங்களும் சென்று விடுவீர்கள். (சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி ஹதீஸ் எண் 4019)

ஆக ஒரு கற்பனை ரீதியிலான விஷயத்தை மிக்தாத் அவர்கள் கூறினார்கள். எனது கரத்தை வெட்டி விட்டால் பின்னர் மரத்திற்கு பின்னால் ஒளிந்து கொண்டால், கலிமா கூறினால், அல்லாஹ்விற்காக நான் முஸ்லிமாகி விட்டேன் என்று கூறினால் அந்நிலையில் நான் அவனை பழிவாங்க வேண்டுமா? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கூடாது. ஒருவேளை நீங்கள் அவ்வாறு செய்தால் அந்த காஃபிர் முஃமினாகி விடுவார். நீங்கள் ஈமானிய நிலையில் இருந்த பிறகும் அந்த காஃபிருடைய இடத்திற்கு சென்று விடுவீர்கள் என்று கூறினார்கள்.

ஆக இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய கலிமா கூறக்கூடியவரின் அந்தஸ்தாகும். இன்றைய நாட்களில் உலமாக்கள் என்று அழைக்கப்படக் கூடியவர்களும், இஸ்லாமிய அரசாங்கங்களும் இந்த செயலை பார்க்க வேண்டும். ஹதீஸின் அடிப்படையில் அவர்கள் முஃமினுடைய இடத்தில் இருக்கின்றார்களா? காஃபீர்களுடைய இடத்தில் இருக்கின்றார்களா? என்று பார்க்க வேண்டுமே!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகங்கள் பனூ கஃபஃபார் கோத்திரத்தின் ஒரு மேய்ப்பாளரின் மேற்பார்வையில் மதீனாவிற்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்தது. அந்த மேய்ப்பருடன் அவரது மனைவியும் இருந்தார். பனு ஃபஸாராவைச் சார்ந்த அயீனா பின் ஹஸன் பனு கத்ஃபானைச் சார்ந்த சில குதிரை ஏற்ற வீரர்களுடன் இணைந்து தாக்குதல் நடத்தினான். மேலும் அந்த ஒட்டக மேய்ப்பரை கொன்றான். மேலும் அவரது மனைவியையும் ஒட்டகங்களையும் கொண்டு சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் சல்மான் பின் அகூ அவர்களுக்கு முதல் முதலில் அந்த மக்களைப் பற்றிய தகவல் கிடைத்தது. அன்னாருடன் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ்வின் ஓர் அடிமை குதிரையை எடுத்துக் கொண்டு வெளியேறினார். ஹஸ்ரத் சல்மா அவர்கள் சானியத்துல் விதா என்ற இடத்தை அடைந்தார்கள். அந்த இடத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. சிலரைப் பொறுத்தவரை அது மதீனாவிலிருந்து வெளியில் உள்ள ஒரு பகுதியாகும். அங்குதான் மக்காவிற்கு செல்லக் கூடிய மக்கள் வழியனுப்பி வைக்கப்படுவார்கள். மேலும் போரிலிருந்து திரும்பி வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மதீனா வாசிகள் அங்கு சென்று தான் வரவேற்பார்கள்.

எவ்வாறிருப்பினும் இவர்கள் அந்த இடத்தை அடைந்தவுடன் அயீனா அவர்களும் அவர்களுடன் இருந்தவர்களும் அன்னாரை அடையாளங்கண்டு கொண்டார்கள். மதீனாவிற்கு அருகிலுள்ள சல்ஆ குன்றின் மீது ஏறி நின்று உதவிக்காக அழைத்தார்கள். உரத்த குரலில் கலீமா கூறினார்கள். மக்களை அழைத்தார்கள். யா சபாஹா என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் சல்மா அம்புகளை எய்தவாறு அவர்களை பின்தொடர்ந்து ஓடினார்கள். அவர்களின் திசையை திருப்பினார்கள். ஹஸ்ரத் சல்மா அவர்களின் உதவியின் குரலைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் அறிவிப்புச் செய்தார்கள். எதிரிகளுக்கு உதவி செய்வதற்காக வெளியேறுங்கள் என்று கூறியதுடன் குதிரையேற்ற வீரர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வரத் தொடங்கினார்கள். அவர்களில் முதல் முதலில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களே லெப்பை என்று கூறியவாறு வந்தார்கள்.

(அஸீரத்துல் நபவிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 3,4 பக்கம் 147,175 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 63 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் மீது படையெடுக்க ஆயத்தமானார்கள். அப்போது அந்த திட்டத்தை மிகவும் இரகசியமாக வைத்திருந்தார்கள். சஹாபாக்கள் அந்த திட்டத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். எனினும் மக்காவை நோக்கி செல்ல வேண்டும் என்பது வெளிப்படையாக கூறப்படவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் பத்ரி சஹாபியான ஹஸ்ரத் ஹாத்திப் பின் பல்தா அவர்கள் தனது அப்பாவித்தனம் மற்றும் அறியாமையின் காரணமாக மக்காவிலிருந்து வந்திருந்த ஒரு பெண்ணிடம் இரகசிய கடிதம் ஒன்றை கொடுத்து மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அக்கடிதத்தில் மக்காவின் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான ஏற்பாடுகளைப் பற்றிய அனைத்து குறிப்புகளும் இடம் பெற்றிருந்தன. அந்தப் பெண் அந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்று விட்டாள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அதைப் பற்றிய செய்தியை

தெரிவித்து விட்டான். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி மற்றும் மூன்று நபர்களை மூவரில் ஒருவர் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களும் ஆவார்கள். அந்த பெண்ணிடமிருந்து கடிதத்தை திரும்ப பெற்று வருமாறு அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னையும் சுபைர் மற்றும் மிக்தாத் அவர்களையும் அனுப்பி வைத்தார்கள். மேலும் ரவ்ஸா காக் என்ற இடத்திற்கு செல்லுங்கள். அங்கு ஒரு பெண்மணி உள்ளார். அவரிடத்தில் ஒரு கடிதம் உள்ளது. அதை வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். எனவே நாங்கள் சென்றோம். எங்களது குதிரைகளை வேகமாக ஓட்டிச் சென்றோம். நாங்கள் அந்த பெண்ணை அடைந்தோம். அந்த கடிதத்தை வெளியே எடு என்று கூறினோம். அதற்கு அவள் என்னிடத்தில் எந்தக் கடிதமும் இல்லை என்று கூறினாள். கடிதத்தை வெளியே எடுத்து விடு; இல்லையென்றால் உமது ஆடையை கழற்ற நேரிடும் என்று நாங்கள் கூறினோம்.

அப்போது அந்தப் பெண் தனது தலை முடியின் கொண்டையில் வைத்திருந்த கடிதத்தை வெளியே எடுத்தாள். நாங்கள் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தோம். அக்கடிதம் அந்த சஹாபியின் சார்பாக நிராகரிப்பாளர்களின் பெயருக்கு எழுதப்பட்டிருந்தது. அந்த சஹாபி தனது அப்பாவித்தனத்தால் அதனை எழுதியிருந்தார். ஆனால் எவ்வாறிருப்பினும் அனைத்து விவகாரங்களும் இரகசியமாக இருந்தன. ஆனால் இந்த விவகாரம் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தி விடும். எனவே அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னரே செய்தியை வழங்கினான். அக்கடிதமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திரும்ப கிடைத்து விட்டது.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 2494)

மூஸா பின் யாகூப் தனது சிற்றன்னையிடமிருந்தும், மேலும் அவர் தனது தாயாரிடமிருந்தும் அறிவிக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களுக்கு கைபரின் விளைச்சலிலிருந்து 15 விஸ்க் அளவு கோதுமை வருடத்தில் கொடுத்து வந்தார்கள். அதனை நாங்கள் முஆவிய்யா பின் அபு சுஃப்யான் அவர்களிடத்தில் ஒரு லட்சம் திர்ஹம் அளவில் விற்பனை செய்து வந்தோம்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 86 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இது வருடாந்திர மற்றும் நிரந்தர வருமானமாக இருந்தது. சில ஆண்டுகளின் விளைச்சல் மற்றும் நிரந்தர விளைச்சலின் விற்பனையாகக்கூட அது இருக்கலாம். ஏனென்றால் இவ்வளவு பெரிய தொகை சிறிய அளவிலான விளைச்சலுக்கு கொடுக்க முடியாது.

யர்மூக் போரிலும் ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். அந்தப் போரில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் காரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்குப் பிறகு இந்த நடைமுறையை செயல்படுத்தினார்கள்.அதாவது போரின் நேரத்தில் சூரா அன்ஃபால் திலாவத் செய்யப்பட்டு வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் கூட மக்கள் இதன்படி அமல் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சிறிய போருக்காக குழு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். அதற்கு ஹஸ்ரத் மிக்தாத் அவர்களை அமீராக ஆக்கினார்கள். அன்னார் திரும்பி வந்த உடன் அபூ மஃபத் அவர்களே! நீர் தலைமைத்துவ பதவியை எவ்வாறு கண்டீர்? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அன்னார், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் குழுவுடன் வெளியேறியபோது எனது நிலை எவ்வாறிருந்தது என்றால் நான் மற்ற மக்களை எனது அடிமையாக கருதிக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தலைமைத்துவ பதவி என்பது இப்படிப்பட்டதாகும். எவரை அல்லாஹ் இதன் தீங்கிலிருந்து பாதுகாத்தானோ அவரைத் தவிர்த்து மற்றவரின் நிலை இப்படித்தான் ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள், அதில் எந்த சந்தேகமும் இல்லை. உங்களை நபியாக உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக! இனி நான் இரண்டு நபர்களுக்கு கூட பொறுப்பாளராக ஆகுவதை விரும்ப மாட்டேன்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 207,208 மஃபத் பின் மிக்தாத் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இது எனது ஓர் அனுபவமாகும். அதில் அனைவரும் எனது அடிமைகள் ஆவர் என்று எனக்கு தோன்றியது. அதன் பிறகு நான் எந்த முடிவிற்கு வந்தேன் என்றால் இனி நான் ஒருபோதும் இரண்டு நபர்களுக்குக் கூட பொறுப்பாளராக ஆகுவதைக் கூட நான் விரும்ப மாட்டேன் என்று கூறினார்கள்.

இதுவே அவர்களின் இறையச்சத்தின் தரமாக இருந்தது. அதிகாரியாக ஆகுவதால் ஆணவம் வந்து விடுகின்றது. எனவே இரண்டு நபர்கள் எனக்குக் கீழ் இருப்பதைக் கூட நான் விரும்பவில்லை என்று அந்த மக்கள் எண்ணினர். எனவே நமது அனைத்து பொறுப்பாளர்களும் இதனை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். ஒன்று, பொறுப்புக்கு ஆசைப்படக் கூடாது. அதிகாரியாக ஆக்கப்பட்டால் மேலும் பதவி வழங்கப்பட்டால் அல்லாஹ்விடம் அந்த பதவியின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் தம்மிடத்தில் ஒருபோதும் ஆணவத்தை உருவாக்காமல் இருக்க அவனுடைய அருளை வேண்ட வேண்டும்.

ஹஸ்ரத் மிக்தாத் ஹம்ஸ் கோத்திரம் சுற்றி வளைக்கப்பட்டிருந்தபோது ஹஸ்ரத் உபைதா பின் ஜராஹ் அவர்களுடன் இருந்தார்கள்.

(தாரீக் அத்திப்ரா தொகுதி 4 பக்கம் 185 – 2002 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிக்தாத் எகிப்து வெற்றியின் போதும் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 43 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 20 ஆம் ஆண்டு எகிப்தின் மீது படையெடுக்கப்பட்டபோது படைத்தளபதி ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் கலீஃபாவிடம் மேலும் படையை அனுப்புமாறு வேண்டினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் அவர்கள் 10000 சிப்பாய்களையும், நான்கு அதிகாரிகளையும் அவர்களின் உதவிக்காக அனுப்பி வைத்தார்கள். அந்த நான்கு அதிகாரிகளில் ஒருவர் ஹஸ்ரத் மிக்தாத் ஆக இருந்தார்கள். மேலும் அக்கடிதத்தில் ஹஸ்ரத் உமர் அவர்கள், இந்த அதிகாரிகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எதிரிக்கு எதிரிலும் ஓராயிரம் சிப்பாய்களுக்கு

சமமானவர்கள் ஆவர் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே இந்த உதவிப்படை சென்றடைந்ததும் போரின் நிலையே மாறி விட்டது. மிகக் குறைந்த காலத்தில் பிர்அவ்னின் பூமி முழுவதும் ஏகத்துவத்தின் சொத்தாக மாறி விட்டது.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 286 ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஜுபைர் பின் நுஃபீஸ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் அவர்கள் எங்களிடம் ஒரு வேலை நிமித்தமாக வருகை தந்தார்கள். அப்போது அல்லாஹ் உங்களுக்கு உடல் ஆரோக்கியத்தை வழங்குவானாக. நாங்கள் உங்களது பணியை முடிக்கும் வரை நீங்கள் இங்கே அமருங்கள் என்று கூறினோம். அதற்கு அன்னார், சமுதாயத்தின் நிலை வினோதமாக உள்ளது. இப்போது நான் வரும் வழியில் சில மக்களை கடந்து வந்தேன். அவர்கள் குழப்பத்திற்கு எண்ணம் கொண்டிருந்தார்கள். மேலும் எவ்வாறு அல்லாஹ் தனது தூதரையும் அவனது தோழர்களையும் சோதித்தானோ அதேபோன்று நிச்சயமாக தம்மையும் சோதிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். அதாவது ஃபித்னாவிலிருந்து பாதுகாக்கப்பட்டவர் பாக்கியசாலி ஆவார். இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள். பின்னர் ஒருவேளை குழப்பம் சோதனைக்குள்ளாக்கப்பட்டடால் பின்னர் பொறுமை செய்ய வேண்டும்.

(அல்மஜ்மவுல் கபீர் தொகுதி 20 பக்கம் 252,253 – பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

எந்தவொரு குழப்பத்திற்காகவும் சோதனைக்காகவும் அல்லது கடினத்திற்காகவும் துஆ செய்யக்கூடாது. அதற்கு ஆசைப்படவும் கூடாது. ஆனால் ஒருவேளை சோதிக்கப்பட்டால் பின்னர் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். பின்னர் அதில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமேயொழிய கோழைத்தனத்தை வெளிப்படுத்தக்கூடாது.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் மெலிந்த உடல் அமைப்பைக் கொண்டிருந்தார்கள். அவ்வாறிருந்தும் ஜிஹாதிற்காக சென்று வந்தார்கள். ஒரு முறை ஒரு ஆசாரியின் மரப்பெட்டிக்கு அருகில் அன்னார் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் அந்த மரப்பெட்டியை விடவும் பெரியவராக தோற்றம் அளித்தார்கள். அப்போது ஒருவர் அல்லாஹ் உங்களை ஜிஹாதிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கி விட்டான். நீங்கள் உடல் பருமன் கொண்டவராக இருக்கின்றீர்கள் என்று கூறினார்.

அன்னாருடைய மகளும் மிக்தாத் அவர்களின் வயிறு பெரிதாக இருந்தது என்று குறிப்பிட்டதை நாம் பார்த்துள்ளோம். எனவே ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் அந்த நபரிடம், சூரா பஹூஸ் என்று கூறினார்கள். பஹூஸ் என்பது சூரா தவ்பாவின் இன்னொரு பெயராகும். அந்த சூராவில் நயவஞ்சகர்கள் மற்றும் அவர்களின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த சூராவில் اِنْفِرُوْا خِفَافًا وَّثِقَالًا என்று வந்துள்ளது. நீங்கள் பருமனாக இருப்பினும் மெலிந்திருப்பினும் ஜிஹாதிற்காக செல்லுங்கள் என்று அதில் என்னைப் பற்றி கூறப்பட்டுள்ளது என்று அன்னார் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 87 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் خِفَافًا وَّثِقَالًا பற்றி இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:

இறைவனின் வழியில் ஜிஹாதிற்காக வெளியேற வேண்டும் என இந்த வசனத்தில் முஸ்லிம்களுக்கு வழியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதில் அவர்களுக்கு எந்த சிரமமும் இருக்கக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது. ஹஃபாஃபா மற்றும் ஸகாலாவிற்கு பல பொருட்கள் உள்ளன. நீங்கள் முதியவராக இருந்தாலும், இளைஞராக இருந்தாலும் தனித்தனி நபராக இருந்தாலும் அல்லது கூட்டமாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும், அல்லது சவாரி செய்யக் கூடியவராக இருந்தாலும் நீங்கள் உங்களிடத்தில் ஆயுதங்கள் நிறைய இருந்தாலும் அல்லது குறைவாக இருந்தாலும், உணவு போதுமானதாக இருந்தாலும், இல்லையென்றாலும் இந்த எல்லா நிலையிலும் நீங்கள் ஜிஹாதிற்காக செல்ல வேண்டும்.

(தரூஸ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) – ரிஜிஸ்டர் எண் 36 பக்கம் 1006)

எனவே இதிலிருந்து ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் தனது உடல் பருமன் அல்லது மெலிவிற்கான பொருளைக் கொண்டு ஜிஹாதில் பங்கு பெறக்கூடிய தனது ஆசையை வெளிப்படுத்தினார்கள்.ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் வயிறு மிகப்பெரியதாக இருந்தது.

அன்னாருக்கு ஒரு ரோமானிய அடிமை இருந்தான். அவன் நான் உங்களது வயிற்றை கிளித்து அதிலுள்ள கொழுப்பை வெளியேற்றி விடுகின்றேன் என்று கூறினான். அக்காலத்தில் நடைமுறையில் இருந்த இந்த அறுவை சிகிச்சையின் மூலமாக வயிறு சிறிதாக்கப்பட்டது. இன்றும் கூட மக்கள் அதனை செய்கின்றனர்.

ஆக மிக்தாத் அவர்களின் வயிற்றை அவன் கிழித்தான். அதிலிருந்து கொளுப்பை வெளியேற்றி மீண்டும் அதை தைத்து விட்டான். ஆனால் அதன் காரணமாக ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் மரணம் நிகழ்ந்து விட்டது. அன்னாருக்கு அதனால் தொற்றுநோய் ஏதும் ஏற்பட்டு அது சரி செய்ய முடியாமல் போயிற்று. எவ்வாறிருப்பினும் அதனைக் கண்ட அந்த அடிமை அங்கிருந்து ஓடி விட்டான்.

(அஸ் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 161 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதன் அடிப்படையில் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் மரணம் ஆமணக்கு எண்ணை குடித்ததன் காரணமாக ஏற்பட்டது என்று வந்துள்ளது. அபூ ஃபாயித் என்பவர் இந்த அறிவிப்பை செய்துள்ளார்.

ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் மகள் கரீமா அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மிக்தாத் அவர்களின் மரணம் மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஜரஃப் என்ற இடத்தில் நிகழ்ந்தது. அங்கிருந்து அன்னாரின் உடல் மக்களால் தோள்களில் சுமக்கப்பட்டு மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டது.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஜன்னத்துல் பகீயில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். ஹிஜ்ரி 33 ஆம் ஆண்டு அன்னாரது மரணம் நிகழ்ந்தது. மரணத்தின்போது அன்னாரது வயது ஏறக்குறைய 70 ஆகவோ அல்லது அதற்கு குறைவாகவோ இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 87 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இப்னு பரீரா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு நான்கு நபர்கள் மீது அன்பு

செலுத்துமாறு கட்டளையிட்டுள்ளான். மேலும் அவர்களை தானும் நேசிப்பதாக எனக்கு கூறப்பட்டுள்ளது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்கள் யார் என்று கேட்கப்பட்டது. இந்த அறிவிப்பு இப்னு மாஜாவில் வந்துள்ளது. பல்வேறு நேரங்களில் பல்வேறு நபர்கள் இருந்துள்ளனர். எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த கேள்விக்கு பதிலாக, அவர்களில் அலி அவர்கள் ஒருவர் என்று கூறினார்கள். இதனை அன்னார் மூன்று முறை கூறினார்கள். பின்னர். அபூ ஸர் என்றும், பின்னர் சல்மான் என்றும் மிக்தாத் அவர்கள் ஆவார்கள் என்றும் கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா... ஹதீஸ் எண் 149)

ஹஸ்ரத் அலி அவர்களிடமிருந்து அறிவிப்பு வந்துள்ளது. ஒவ்வொரு நபிக்கும் 7 நெருங்கிய தோழர்கள் வழங்கப்பட்டுள்ளனர். அறிவிப்பாளர் கூறுகின்றார். நண்பர்கள் என்பதற்கு பகரமாக கண்காணிப்பாளர் என்ற சொல்லையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால் எனக்கு 14 நபர்கள் வழங்கப்பட்டுள்ளார்கள் என்று கூறினார்கள். அதற்கு யார் என்று நாங்கள் கேட்டோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அலி அவர்கள் கூறினார்கள்: அதில் ஒன்று நான் ஆவேன். அதாவது ஹஸ்ரத் அலி ஆவார்கள். அன்னாரது ஹஸன், ஹுஸைன் என்ற இரண்டு மகன்கள். ஜாஃபர், ஹம்ஸா, அபூபக்ர், உமர், மஸ்அப் பின் உமைர், பிலால், சல்மான், அம்மார், மிக்தாத், ஹுஸைஃபா, அபூதர் மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ஆகியோர் ஆவர். இது சுனன் திர்மிதியின் அறிவிப்பாகும்.

(சுனன் திர்மிதி கிதாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3785)

திருக்குர்ஆனில் சூரா அன்ஆமில் இடம்பெற்றுள்ள வசனமாகும்.

وَلَا تَطْرُدِ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيْدُوْنَ وَجْهَهٗ مَا عَلَيْكَ
مِنْ حِسَابِهِمْ مِّنْ شَيْءٍ وَّمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِمْ مِّنْ شَيْءٍ
فَتَطْرُدَهُمْ فَتَكُوْنَ مِنَ الظّٰلِمِيْنَ

தனது இறைவனின் திருப்தியை விரும்பியவாறு காலையிலும் மாலையிலும் அவனை அழைக்கக் கூடிய மக்களை நீர் விரட்டாதீர். அவர்களுடைய கணக்கு எதுவும் உமது பொறுப்பில் இல்லை. உம்முடைய எந்த கணக்கும் அவர்களுடைய பொறுப்பில் இல்லை. இதன் பின்னரும் நீர் அவர்களை விரட்டி விட்டால் நீர் அநீதி இழைப்பவர்களை சார்ந்தவர் ஆவீர்.

ஹஸ்ரத் சஅது இந்த வசனத்தைப் பற்றி கூறுகின்றார்கள்: அது இப்னு மாஜாவின் அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது. இந்த வசனம் 6 நபர்களைப் பற்றி இறங்கியது. நானும் அதில் ஒருவன் ஆவேன். அதாவது ஹஸ்ரத் சஅது, இப்னு மஸ்ஊது, சுஹைப் அம்மார், மிக்தாத் மற்றும் பிலால் ஆகியோர் ஆவர்.

குரைஷிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நாங்கள் இந்த மக்களை பின்பற்றுவதை விரும்பவில்லை என்றும் எனவே நீர் அவர்களை உம்மிடமிருந்து விரட்டி என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறியதாக ஹஸ்ரத் அசது அவர்கள் கூறுகின்றார்கள். இதன் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இந்த விஷயத்தை கூறினான். மேலும் இந்த வசனத்தை அன்னாருக்கு இறக்கினான்.

وَلَا تَطْرُدِ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيْدُوْنَ وَجْهَهٗ

நீர் தனது இறைவனின் திருப்தியை விரும்பியவாறு காலையிலும் மாலையிலும் அவனை அழைக்கின்ற மக்களை நீர் விரட்டாதீர். (சுனன் இப்னு மாஜா... ஹதீஸ் எண் 4128)

எவ்வாறிருப்பினும் இந்த வசனம் இறங்கியதற்கு காரணம் எதுவாக இருந்தபோதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளிடம் இதே பதிலைத்தான் கூறியதாக அறிவிப்பாளர் கூறுகின்றார்.

மற்றொரு அறிவிப்பின் அடிப்படையில் அல்லாஹ்வின் வழியில் குதிரையில் சவாரி செய்து போரில் பங்கு பெற்ற முதல் சஹாபி ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் ஆவார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 160 மிக்தாத் பின் அல் அஸ்வத் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது பற்றி முன்னரும் சிறிது கூறியுள்ளேன். ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஒரு நாள் இயற்கை கடனை கழிப்பதற்காக பகீஃ என்ற இடத்திற்கு சென்றார்கள். அது கபருஸ்தான் ஆகும். அக்காலத்தில் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு இயற்கை கடனை கழிப்பதற்கு மக்கள் அங்கு சென்று வந்தார்கள். எனவே அன்னாரும் இயற்கை கடனை கழிப்பதற்காக திறந்த வெளியில் நுழைந்தார்கள். அக்காலத்தில் உணவு மிகக் குறைவாகவே உண்டு வந்தார்கள்.

எனவே அக்காலத்து மக்கள் ஒட்டகத்தின் சாணத்தைப் போன்றே மலம் கழித்து வந்தார்கள். இதற்கிடையில் இயற்கை கடனை கழிப்பதற்காக அமர்ந்திருந்த அவர்கள் ஒரு எலி ஒன்றை பார்த்தார்கள். அது பொந்திலிருந்து ஒரு தினாரை வெளியேற்றியது. பின்னர் உள்ளே சென்று மற்றொரு தினாரை கொண்டு வந்தது. எந்த அளவுக்கு என்றால் 17 தினாரை வெளியே கொண்டு வந்தது. அதன் பிறகு சிவப்பு நிற ஆடை ஒன்று பொந்திலிருந்து வெளியே கொண்டு வந்தது.

ஹஸ்ரத் மிக்தாத் கூறுகின்றார்கள்: நான் அந்த ஆடையை இழுத்தேன். அதில் ஒரு தினார் இருப்பதைக் கண்டேன். இவ்வாறு 18 தினார்கள் ஆகின. பின்னர் அதனை நான் எடுத்துக் கொண்டு வெளியேறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அதனை கொண்டு சென்றேன். அவர்களிடத்தில் அனைத்தையும் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதனை சதகாவாக பெற்றுக் கொள்ளும்படி கூறினேன். அதற்கு அன்னார் இது சதகாவாக ஆகாது. இதனை நீங்களே எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். அல்லாஹ் உங்களுக்கு இதில் பரக்கத் வைத்துள்ளான் என்றும் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் ஒருவேளை அந்த பொந்தில் கைவிட்டிருப்பீரே? என்று கேட்டார்கள். அதற்கு நான், உங்களுக்கு உண்மையுடன் கண்ணியத்தை வழங்கிய அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அதில் கையை விடவில்லை என்று கூறினேன். இவ்வாறாக அல்லாஹ் எனக்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான். (சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 2508)

ஜுபைர் பின் நஃபீல் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் நாங்கள் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களுடன் சபையில் அமர்ந்திருந்தோம். ஒரு நபர் அந்த வழியாக கடந்து சென்றார். அப்போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தரிசித்த கண்கள் எவ்வளவு அருளுக்குரிய கண்கள் என்று கூறினார்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் பார்த்ததை நாங்களும் பார்த்திருக்க வேண்டும் என்பது எங்களது உளமார்ந்த ஆசையாகும் என்று கூறினார். சஹாபாக்களை சுட்டிக்காட்டி அவர்கள் கண்டதை நாங்களும் கண்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார். இதைக்கேட்ட ஹஸ்ரத் மிக்தாத் அவர்கள், கோபப்பட்டார்கள்.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 2-9 January 2020 Issue No. 1-2

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் மிக ஆச்சரியத்துடன் அந்த நபர் வெறும் நன்மைக்கான விஷயத்தை மட்டும்தானே பேசியுள்ளார் என்று கேட்டேன். அதற்கு மித்தாத் அவர்கள் அந்த நபரின் பக்கம் கவனத்தை திருப்பியவாறு கூறினார்கள்: அல்லாஹ் அக்காலத்திலிருந்து அவரை விலக்கி வைத்திருக்கும்போது அந்த நபருக்கு அக்காலத்தை அடைய வேண்டும் என எந்த விஷயம் நிர்பந்திக்கின்றது? மேலும் ஒருவேளை அவர் அந்த நேரத்தில் இருந்திருந்தால் அவர் எந்த இடத்தில் இருந்திருப்பார் என்று நமக்கு என்ன தெரிந்திருக்கும்?

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் தொடர்ந்து கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் நரகத்தில் முகம் குப்புற வீசும் நபர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தை அடைந்திருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொள்ளவுமில்லை. அவர்களை உண்மைப்படுத்தவும் இல்லை. தற்போது அந்த காலத்தை அடைந்திருக்க வேண்டும் என்று கூறுகின்ற அந்த நபர் அவருடைய பாக்கியத்தில் என்ன இருந்தது என்பது நமக்கு என்ன தெரியும்? அக்காலத்தை அடைந்து அவர் ஒப்புக் கொள்ளாமல் இருந்திருந்தால் அவர் நரகத்திற்கு சென்றிருப்பார். நீங்கள் அல்லாஹ்வை ஏன் புகழ்வதில்லை?

அவன் உங்களை எப்படிப்பட்ட காலத்தில் தோன்றச் செய்துள்ளான் என்றால் அதில் நீங்கள் அல்லாஹ்வை மட்டுமே உங்களது இறைவனாக அடையாளங்கண்டு கொண்டுள்ளீர்கள். தற்போது நீங்கள் எந்த ஷிர்க்கும் செய்வதில்லை. உங்களது இறைவனை அடையாளங்கண்டு கொண்டுள்ளீர்கள். தூதர் மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள். நபியால் கொண்டு வரப்பட்ட வேதத்தை உண்மைப்படுத்தியுள்ளீர்கள். மேலும் அல்லாஹ் மற்றவர்கள் மூலமாக உங்களை சோதனையிலிருந்து காப்பாற்றி விட்டான். முந்தைய காலத்து மக்கள் சோதனையை எதிர்கொண்டார்கள். அல்லாஹ் உங்களை அந்த சோதனையிலிருந்து காப்பாற்றி விட்டான். அதற்காக நீங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள்.

இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அறிவீனமான காலகட்டத்தில் அனுப்பினான். அந்த காலகட்டம் எல்லா நபிமார்களின் காலகட்டத்தையும் விட கடினமாக இருந்தது. நீண்ட காலத்திற்குப் பிறகுதான் வஹீ இறங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தோன்றினார்கள். அக்காலத்தில் ஷிர்க் அதிகமாக பரவி இருந்தது. அந்த காலம் மிகக் கடினமான காலமாக இருந்தது. மக்கள் சிலைகளை வணங்கி வந்தார்கள். சிலைகளை விட வேறு எவருக்கும் எந்த முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவான சான்றுகளுடன் தோன்றினார்கள். அன்னார் உண்மையையும், பொய்யையும் வேறுபடுத்திக் காட்டினார்கள். மேலும் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்தினார்கள். எந்த அளவுக்கு என்றால் ஒரு நபர் தனது தந்தை அல்லது மகனை அல்லது சகோதரனை காஃபிராக கருதி வந்தார். ஆனால் அல்லாஹ் அவரது உள்ளத்தின் பூட்டை ஈமானிற்காக திறந்து கொடுத்து விட்டான். அவர் நிராகரிப்பின் நிலையில் மரணித்து விட்டால் நரகத்திற்கு சென்று விடுவேன் என்று அறிந்திருந்தார். அவரது உறவினர், அவரது அன்பிற்குரியவர் நரகிற்கு செல்வார் என்பது அவரது கண்களுக்கு குளிர்ச்சியை வழங்கவில்லை.

அதன் காரணமாக எவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்களோ மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் தங்களது உறவினர்களைக் குறித்து கவலை கொண்டவர்களாக இருந்து வந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளாமல் எதிர்த்து வந்தால் நரகத்திற்கு சென்று விடுவார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதன் காரணமாகவே அல்லாஹ் கூறினான்.

وَالَّذِينَ يَقُولُونَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا قُرَّةَ أَعْيُنٍ

அதாவது அந்த மக்கள் எங்கள் இறைவா! நீ எங்களின் வாழ்க்கைத் துணையையும், எங்களது பிள்ளைகளையும் எங்களுக்கு குளிர்ச்சியாக ஆக்குவாயாக என்று கூறி வந்தனர். (25:75)

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 890 மித்தாத் பின் அல் அஸ்வத் ஹதீஸ் எண் 24311 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஆக இந்த துஆவை நாம் எப்போதும் செய்து வர வேண்டும். ஏனென்றால் இதன் மூலமே சந்ததிகளிலும் மார்க்கம் நிலைபெற முடியும். இன்று அல்லாஹ் செய்துள்ள அருளுக்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபர் திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்டார்கள். உரத்த குரலில் அவர் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த நபர் இறையச்சம் கொண்ட மனிதர் ஆவார் என்று கூறினார்கள். அவர் ஹஸ்ரத் மித்தாத் பின் அம்ர் அவர்களாக இருந்தார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 44 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்ளும் நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதன் உரிமையை செலுத்துகின்ற நற்பாக்கியத்தையும் நமக்கு வழங்குவானாக. மேலும் நாம் நம்மிடத்தில் இறையச்சத்தை உருவாக்கிக் கொள்வதற்காக நற்பாக்கித்தையும் நமக்கு வழங்குவானாக.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad